ශ්‍රී ලංකා නව නිපැයුම්කරුවන්ගේ කොමිසම

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

SRI LANKA INVENTORS COMMISSION



වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT 2020

නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන, පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය

திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

State Ministry of Skills Development,Vocational Education, Research & Innovation

வருடாந்த அறிக்கை - 2020

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

(திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு))

இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழு

விலாசம் : 46 மற்றும் 48, கொட்டா வீதி, கொழும்பு 08.

தொலைபேசி : 011-2676650 தொலைநகல் : 011-2676646

மின்னஞ்சல் : info@slic.gov.lk இணையத்தளம் : www.slic.gov.lk

உள்ளடக்கம்

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 4

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள் 5

ஆணையாளரின் செய்தி 6

முன்னைய ஆணையாளரின் செய்தி 7-8

1. இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழு 9

1.1 அறிமுகவுரை 9
1.2 நோக்கு 9
1.3 பணி 9
1.4 குறிக்கோள்கள் 9
1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் 10
1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு 11
1.7 மனித வளங்கள் 12

2. 2020 ஆம் ஆண்டில் நடைமுறைபடுத்துகை செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் 13

2.1 "சஹசக் நிமவும் 2020" சர்வதேச புதுக்கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கக் கண்காட்சி என்பதுடன் புதுக்கண்டுபிடிப்புக்களின் ஊடாக இலங்கையரினை உலகுடன் இணைப்பதற்கான போட்டி 13-14
2.2 புதுக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றினை வினைத்திறன் மிக்க முறையில் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு புதிய செயன்முறைகள் 15
2.3 இலங்கைக்கான புத்தாக்க துரிதப்படுத்துகை நிதிய பொறிமுறை (IAFM-SL) - புதிய கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான கருத்திட்டம் 15
2.4 புத்தாக்கங்களுக்கான வர்த்தக அடிப்படையினை தாபிப்பதற்கான "நவ நிபயும் திரிய" 15-16
2.5 புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்பவியல் ரீதியிலான உதவிகளினை வழங்குவதற்கு தொழில்நுட்பவியல் அடைகாப்பக நிலையங்களினை தாபித்தல் 17
2.6 புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச கூட்டிணைவுகளினை கட்டியெழுப்பல் 18
2.7 இளம் புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல் -- இலங்கையருக்கான புத்தாக்க கலாச்சார பாதை வகுக்கப்படல் 19-20
2.8 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அதி புலமை சொத்து உரிமைகளினை பாதுகாப்பதற்கு புத்தாகுனர்களுக்கு உறுதுணையாக இருத்தல் 21
2.9 காலத்தோடு ஒன்றிய சமூக பிரச்சனைகளுக்கு புத்தாக்க ரீதியிலான தீர்வுகள் 22-31
2.10 புத்தாகங்களினை காட்சிப்படுத்துகை செய்வதற்கான சர்வதேச மாநாடு - "புத்தாகத்திலிருந்து அதன் தாக்கத்திற்கு" ("From Innovation to Impact - FITI ") 32
2.11 அக புத்தாகுனர்களினை ஊக்குவிப்பதற்கு சர்வதேச புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சியில் கலந்துக்கொள்ளல் 33-35
2.12 புத்தாகங்களினை சமூக மட்டத்தில் அறியச் செய்வதற்கு மாகாண மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டம் 35
2.13 புத்தாக்குனர்களின் விழிப்புணர்ச்சிக்கு நேரடி நிகழ்ச்சித்திட்டங்கள் 36
2.14 புத்தாக்கங்களினை பிரபல்யப்படுத்துகை செய்தல் "இலங்கை புத்தாக்குனர்கள்" - YouTube இன் ஊடாக அணுகல் 36-41
2.15 தேசிய புத்தாக்குனர் தினம் 41
2.16 மனித வள விருத்தி 41

3. நிதி அறிக்கை 42-66

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

திருமதி. W.A. ஹிமாலி குலதுங்க (2020.01.01 இலிருந்து 2020.0301. வரையில்)
ஆணையாளர் (பதில் கடமையாற்றல்)

பேராசிரியர் இரன்கிக உமேஷ் ஹல்வதுற (2020.03.16 இலிருந்து 2020.31.12 வரையில்
ஆணையாளர்

Dr. சனத் ஹெட்டிகே (2020.05.11 இலிருந்து 2020.07.31 வரையில்)
உதவி ஆணையாளர்

பேராசிரியர் நீலிகா மளவிகே (2020.11.20 இலிருந்து 2020.12.31 வரையில்)
உதவி ஆணையாளர்

திரு. A.P.S.L. விஜேசிங்க (2020.11.20 இலிருந்து 2020.12.31 வரையில்)
உதவி ஆணையாளர்

திரு. P.V.B.P. சிசிர நந்தன (2020.01.01. இலிருந்து 2020.12.31 வரையில்)
திறைசேரி பிரதிநிதி

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள்

திரு. P.V.B.P. சிசிர நந்தன (2020.01.01. இலிருந்து 2020.12.31 வரையில்)
திறைசேரி பிரதிநிதி

Dr. சனத் ஹெட்டிகே (2020.05.11 இலிருந்து 2020.07.31 வரையில்)
உதவி ஆணையாளர்

பேராசிரியர் நீலிகா மளவிகே (2020.11.20 இலிருந்து 2020.12.31 வரையில்)
உதவி ஆணையாளர்

திரு A.P.S.L. விஜேசிங்க (2020. 11.20 இலிருந்து 2020.12.31 வரையில்)
உதவி ஆணையாளர்

திருமதி. H.D. அநுருத்திகா (2020.01.01 இலிருந்து 2020.12.31 வரையில்)
உள்ளக கணக்காய்வாளர்
திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

திருமதி W.P.L.S.R. பெரேரா (2020.01.01 இலிருந்து 2020.12.31 வரையில்)
கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திலிருந்து பிரதிநிதி

ஆணையாளரின் செய்தி



இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, 1979 ஆம் ஆண்டின். 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதோடு இதன் பிரதான குறிக்கோளானது, அக அடிப்படையில் கண்டுபிடிக்கப்படும் புத்தாக்கங்கள் மற்றும் புதுக்கண்டு பிடிப்புக்களினை ஊக்குவிப்பதுடன் புத்தாகுனர்களுக்கு தொழில்நுட்பவியல், நிதியியல் மற்றும் சட்ட ரீதியிலான உதவிகளினை வழங்குதலாகும்.

பயன் தரக்கூடிய திட்டங்களினை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துகை செய்வதற்கு ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் முயற்சியானது இலங்கை வாழ் மொத்த சமூகத்திற்கும் சாதகமானதொரு பயனை தரும். இலங்கை பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் ஒவ்வொரு உற்பத்தி துறையினையும் மேம்படுத்தும் பொருட்டு இலங்கையில் புத்தாக்க கலாச்சாரம் ஒன்றினை உருவாக்கல் அத்தியாவசியமானதாகும்.

மேற்குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்களினை சாதிப்பதற்காக, புத்தாகுனர்களின் செயற்றிறனை இனம் காண்பதற்கும் அத்துடன் அவர்களினை பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளினை சாதிக்கும் அதேவேளையில் புத்தாக்குனர்களுக்கும் அனுகூலங்களினை செய்வதற்கும் ஏற்ற வகையில் ஆணைக்குழுவானது ஏற்கனவே திட்டங்களினை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துகை செய்வதற்கு தொடங்கியுள்ளது.

இதற்கு முயற்சியில், புத்தாகுனர்கள் தமது திறமைகளினை பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, திறந்த மற்றும் வர்த்தக ஆகிய நான்கு வகுதிகளிலும் மற்றும் 14 புத்தாக்க துறைகளிலும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் ஆணைக்குழுவானது நிகழ்ச்சிச் திட்டங்களினை அமுல்படுத்துகை செய்கின்றது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் தற்போதைய ஆணையாளர் என்ற வகையில், ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து வெற்றிகரமாக நிகழ்ச்சிச் திட்டங்களினையும் மிகவும் வினைத்திறனுடனும் அத்துடன் பயனுறுதியுடனும் தொடர்வதற்கும், புதிய நிகழ்ச்சிச் திட்டங்களினை அறிமுகப்படுத்தவும் மற்றும் நாடளாவிய ரீதியில் இருக்கின்ற புதுக்கண்டுபிடிப்பாளர்களின் திறன்களினை அடையாளம் கண்டு அவற்றை தேசிய மற்றும் சர்வதேச நிலைக்கு கொண்டு வருவதற்கும் தலைமைத்துவம் வழங்க நான் விரும்புகிறேன்.

மேலும், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் "சுபீட்சத்திற்கான நோக்கு" பற்றிய கொள்கை பிரகடனத்திற்கு அதிகபட்ச பங்களிப்பை வழங்க ஆணைக்குழுவானது, எப்பொழுதும் தயாராக உள்ளது என்பதுடன் சாத்தியத் தன்மை மிகு புத்தாக்குனர்கள் மற்றும் முதலீட்டாளர்களினை தேடி நாடளாவிய ரீதியில் உள்ள கிராமங்களுக்குச் விஜயம் செய்வதற்கும் திட்டமிட்டுள்ளது.

ஆணைக்குழுவினால் முற்கூட்டியே திட்டமிடப்பட்ட செயற்பாடுகளினை சிறப்பாக சாதிப்பதற்கு அதன் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களினால் சபை பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்ட உச்ச பங்களிப்பானது, பாராட்டத்தக்கதாகும்.

புத்தாக்குனர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு தமது சிறந்த சேவையினை வழங்கிய சகலருக்கும், இராஜாங்க அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சீதா அரெம்பேபொல அவர்களுக்கும், நேர் அமைச்சின் செயலாளருக்கும், அமைச்சின் ஏனைய பதவிநிலை உத்தியோகத்தவர்களுக்கும் அத்துடன் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்வதற்கு இது ஒரு நல் வாய்ப்பாகும். அத்துடன் இலங்கையில் ஒரு புத்தாக்க கலாச்சாரம் உருவாகுவதற்கு தமது பங்களிப்பினை உயர்ந்த அளவில் வழங்கிய புத்தாக்குனர்கள் மற்றும் புதிது கண்டுபிடிப்பாளர்களுக்கு எனது நன்றியினை விசேடமாக தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

பேராசிரியர் என்.எம்.எஸ். சிரிமுது
ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

முன்னைய ஆணையாளரின் செய்தி



இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் பிரதான குறிக்கோளானது, புதுத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்பவியல், நிதியியல் மற்றும் சட்ட ரீதியிலான உதவிகளினை வழங்குவதோடு தேசத்தில் புதிது கண்டுபிடிக்கும் திறனை ஊக்கப்படுத்தலாகும்.

மேலும், ஆணைக்குழுவானது அதனது பிரதான குறிக்கோளினை நிறைவேற்றம் செய்யும் அதேவேளையில், தேசத்தின் பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் வகையில் புத்தாக்கம் மற்றும் புதுக்கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு தனது ஆதரவினை வழங்குகிறது என்பதனை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

புத்தாக்கம் ஒன்று விருத்தி செய்யப்படல் மட்டுமே திருப்தியினை தரக்கூடிய ஒரு விடயமாக அமையாது. அப்புத்தாக்கமானது வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படக்கூடியதொன்றாக அமைதலே மிகச்சிறப்பானதாகும். புத்தாக்கம் இத்தகைய ரீதியிலானதொரு புத்தாக்கமாக அமைவதற்கு அப்புத்தாக்குனருக்கு சரியான வழிகாட்டல் அமைதல் மிக அவசியமாகும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால், மக்களின் நலனுக்காக அதனது கடமைகளினை உயர்ந்த அளவில் நிறைவேற்றம் செய்யும் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துகை செய்யப்பட்டன.

- காலத்தின் தேவைக்கேற்ப ஏற்படும் பிரச்சனைகளுக்கு வெற்றிகரமான முறையில் தீர்வினை கண்டுபிடிப்பதற்காக நிகழ்ச்சிதிட்டங்களினை அமுல்படுத்துகை செய்தல்
- இலங்கையில் கொவிட் 19 பரவுவதலினை தணிப்பதற்கு ஏற்ற விதத்தில் தீர்வுகளினை உள்ளடக்கியதாய் "கொவிட் 19 எதிராக போராடுவோம்" எனப்படும் நிகழ்ச்சிச்திட்டத்தினை அமுல்படுத்துகை செய்தலுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக சமுதாயத்தில் அப்புத்தாக்கம் தொடர்பில் விழிப்பணர்ச்சியினை ஏற்படுத்தல்.
- மனிதன் - யானை எனபனவற்றுக்கு இடையிலான மோதல்களினை தடுப்பதற்காக, அப்பிரச்சனைகள் இருக்கின்றது என இனம் காணப்பட்ட பிரதேசங்களில் யானையினை தடுப்பதற்கான "யானை வேலியினை" (மின் வேலி) வெற்றிகரமாக தாபித்தலும் அப்புத்தாக்கம் வெற்றிகரமாக அமுல்படுத்துகை செய்யப்படுவதற்கு சந்தர்பத்தினை ஏற்படுத்தலும்.
- விவசாயம் மற்றும் உணவுத் தொழில் நுட்ப துறைகளில் கண்டுபிடிக்கப்படும் புதிய கண்டு பிடிப்புக்களுக்கு முதலீடு வாய்ப்புக்களினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- தேசிய மட்டத்தில் தேயிலை கைத்தொழில் துறையினை விஸ்தரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய புதுப்புது ஆலோசனைகளினை வழங்கும் பொருட்டு "Tea Talk" எனும் தலைப்பில் நிகழ்ச்சித் திட்டங்களினை, இலங்கை தேயிலை சபையின் உதவியுடன் ஒழுங்கமைத்தல்.
- பற்றாக்குறையாக விளங்கும் சக்தி தேவைப்பாடுகளுக்கு ஒரு தீர்வு என்ற வகையில புதுப்பிக்கத்தக்க சக்தியினை பிறப்பிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய புதிய ஆலோசனைகளினை உள்ளடக்கிய நிகழ்ச்சிதிட்டங்களினை வடிவமைத்தல்.
- இதைவிட, தேசிய மட்டத்தில் உள்ள புத்தாகங்களினை, "சஹசக் நிமவும்" போன்ற சர்வதேச மட்டத்திலான புதிய மற்றும் புத்தாக்க கண்காட்சிகளின் ஊடாக மேம்படுத்துவதோடு, சர்வதேச மட்டத்திலான பங்குபெறல்களினை மேற்கொள்வதன் மூலம் அந்நிய செலாவணியினை உழைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- அரச தனியார் பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக ஏற்றுமதி சந்தையின் ஆதரவினை பெறுதல் பொருட்டு அக புத்தாக்குனர்களினை முதலீட்டாளர்களுடன் இணைத்தல்.
- புதிது கண்டுபிடிக்கும் திறனை வளர்ப்பதற்கும் அதனை விருத்தி செய்வதற்கும் "இளம் புத்தாக்குனர் கழகங்களினை" தாபிப்பதற்கு நடவடிக்கைகளினை எடுத்தலும் நிதியியல் நிறுவனங்களின் உதவியுடன் இக்கழகங்களினை சிறப்பாக செயற்பட ஆதரவு அளித்தலும்.
- புதிது கண்டுபிடிக்கும் திறனுக்கு தேவைப்படக்கூடிய தொழில்நுட்பவியல் அறிவினை வழங்கும் பொருட்டு "கருத்துக்கள் அடைகாப்பகம்" எனும் தலைப்பில் நிகழ்ச்சிதிட்டங்களினை வடிவமைத்தல்.
- புதுக்கண்டு பிடிப்புக்களினை பிரபல்யப்படுத்தும் முகமாக "nipeumani" நிகழ்ச்சிதிட்டங்களினை கலையரங்க வசதிகளுடன் ஒழுங்கமைத்தல்.
- புத்தாக்கங்களுக்கான அதிபுலமை சொத்து உரிமைகளினை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளினை எடுத்தல்.
- இலங்கை சார் புத்தாக்குனர்களுக்கு அவர்களது புதுக்கண்டுபிடிப்பக்கள் பற்றிய விபரங்களினை வெளிப்படுத்துவதற்கு எனும் தொனிப்பொருளின் கீழ் ஒரு நியம முறையிலான மாநாட்டினை இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுத்தல்.
- மின்னியல் மற்றும் அச்சிடல் ஊடகங்களினை பயன்படுத்தி பல்வேறு நிகழ்ச்சிதிட்டங்களினை அமுல்படுத்துதல். அதுபோன்று இணையம் போன்ற சமூக ஊடகங்களின் ஊடாக புதுக்கண்டுபிடிப்புக்களினை பிரபல்யப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் பொது மக்களிடையே புத்தாக்கம் பற்றிய ஆர்வத்தினையும் விழிப்புணர்ச்சியினையும் எதுவித செலவுகளுமின்றி ஏற்படுத்துதல்.
- "தொழில்நுட்பவியல் அடைகாப்பக நிலையங்களினை" தாபித்து அவற்றினை சிறப்பாக செயற்படச் செய்து அதன் மூலம் சிறந்த தொழில் நுட்பங்களினை வளர்ந்து வரும் புத்தாக்கங்களுக்கு வழங்குவதன் ஊடாக அந்த புத்தாகங்களினை மேலும் தரமுடையதாக்குதல். அத்துடன் அவ்வாறு தரமுடையதாக்கப்பட்ட புத்தாக்கங்களினை "நவ நிபயும் திரிய" மற்றும் "IAFM-SL" போன்ற கருத்திட்டங்களின் ஊடாக வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு பொறிமுறைகளினை அமுல்படுத்தல்.
- அக புத்தாக்குனர்கள் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் கலந்துக்கொள்வதற்கு ஏற்ற வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களினை முறைவடிவமாக்கம் செய்தல்.

ஆணைக்குழுவினால் நடைமுறையாக்கம் செய்யப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் மேலே சுருக்கமாக தரப்பட்டுள்ளது. இதனைவிட, தேசிய பொருளாதாரம் மற்றும் மக்கள் ஆகியோருக்கு அனுகூலத்தினை தரும் வகையில் பல நிகழ்ச்சிச்திட்டங்களினை எதிர் வரும் காலங்களில் நடைமுறையாக்கம் செய்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஒரு அரச நிறுவகம் என்ற வகையில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடமைகளினை விட மேலதிகமாக ஆணைக்குழுவினால் ஆற்றப்பட்ட பற்பல தேசிய ரீதியிலான பொறுப்புக்களினை நினைவு கூறும் அதேவேளையில், இச் செயற்பாடுகளினை நிறைவேற்றம் செய்வதற்கு தமது நிகரில்லா ஒத்துழைப்பினை அயராது தந்த ஆணைக்குழுவின் பதவியணியினருக்கு எனது நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆணைக்குழுவின் செயற்பாடுகளினை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் வகையில் வழிகாட்டல்களினை வழங்கிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கும், நேர் அமைச்சின் அலுவலர்களுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் எனது பாராட்டுதல்களினை நான் தெரிவிப்பதோடு, ஆணைக்குழுவின் வெற்றிக்கும் அது சிறந்த முறையில் முன்னோக்கி நடைபயின்று செல்வதற்கும் பெரும் ஆதரவாக இருந்தது உங்கள் உறுதுணை என்பதும் எனது நம்பிக்கையாகும்.

பேராசிரியர் ஆர்.யு. ஹல்வதுர
முன்னைய ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைகுழு

1. இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழு

1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கத்தினை கொண்ட இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட நியதிசட்ட சபையான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் (SLIC), பிரதான குறிக்கோளானது, அக புத்தாக்குனர்களின் புத்தாக்க திறனுக்கு ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு வழங்குதல், புத்தாக்கங்களின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஒதுக்கீடுகளினை மேற்கொள்ளல் என்பனவாகும்.

1.2 நோக்கு

கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக சுபீட்சமடைதல்

1.3 பணி

தேசத்தில் புத்தாக்க இயலளவுகளை வெளிக்கொணர்கின்ற முன்னணி வினையூக்கியாக திகழ்தல். சிந்தனைகளினை செய்முறை பிரயோகங்களாக மாற்றுகின்ற செயன்முறையினை வசதிப்படுத்தும் முன்னோடியாக விளங்குதல்

1.4 குறிக்கோள்கள்

1.4.1 இலங்கை பிரசைகளினை புத்தாக்கம் மற்றும் புது கண்டுபிடிப்புக்களினை செய்வதற்கு ஊக்குவித்தல்

1.4.2 புத்தாக்குனர்களுக்கு தொழில் நுட்பவியல் உதவிகள், நிதி உதவிகள் மற்றும் சட்ட உதவிகளினை வழங்கல்

1.4.3 2.1.3 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்

1.4.4 2.1.4. மேற் கூறப்பட்ட சகல குறிக்கோள்களினையும் சாதிப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளினையும் முன்னெடுத்தல்

1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

அ) புத்தாக்குனர் புத்தாக்கங்களை காப்புரிமை வழங்கப்படுதலிற்கு ஏற்புடையதா என உறுதி செய்து கொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசலித்து அவர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்

ஆ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு, நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்

இ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கபடுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்

ஈ) இலங்கைக்கு பயனளிக்கக்கூடிய புத்தாக்கங்களை அப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பனவற்றை கருத்திற்கொண்ட பின்பு அவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்காக தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு அரசின் கீழடங்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களுக்கு நீண்ட கால கடன் வழங்க பரிந்துரைத்தல்;

உ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்;

ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை பலர் அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை "புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது" எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சி விழாவின் போது இலங்கையில் காப்புரிமை பெற்ற புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் விருதுகள் வழங்கப்படும் என்பதுடன் இந்த விழாவின் போது தெரிவு செய்யப்படும் புத்தாக்கங்களாவன விவசாயம், இரசாயணவியல், மருத்துவம், தேசிய பாதுகாப்பு. மருந்தகவியல். பௌதிகவியல், பொது பாதுகாப்பு மற்றும் நலன்புரி. பொதுப்பணிகள், போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்.

எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல். அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்

ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன் என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் வருடாந்தம் இடம்பெறும் "ஆக்கற்றிறன் மிகு ஆராய்ச்சி போட்டியில்" "புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருது வைபத்தின்" நடுவர்களால் மேலே பந்தி (ஊ) வில் கூறப்பட்டதும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் புதிய படைப்புக்களை படைத்தலில் துணையாக இருப்பதற்கும் மற்றும் அதில் வெற்றியாளர்களை தெரிவுசெய்து பணப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும்


ஐ) புத்தாக்கம், ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பவற்றில் தகவல்களை பிரிசுரித்தலும் பரப்புவதற்கு

ஒ) புத்தாக்குனர்களிடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத்தொடர்களை நடாத்துவதற்கு

ஓ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல் மற்றும்

ஔ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிகூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



1.7 மனித வளங்கள்

பதவி	அனுமதிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவு	2020 ஆம் ஆண்டில் தொழில் நிலைப்பிரிவு	2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு வெற்றிடங்கள்
பணிப்பாளர் (சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர்)	01	01	-
பிரதி / உதவி பணிப்பாளர்	02	02	-
பிரதி / உதவி பணிப்பாளர் (நிதி)	01	01	-
சட்ட அலுவலர்	01	-	01
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	03	03	-
நிர்வாக அலுவலர்	01	01	-
நிதி அலுவலர்	01	01	-
ஆராய்ச்சி உதவியாளர்	05	03	02
முகாமைத்துவ உதவியாளர்	07	07	-
சாரதி	04	04	-
அலுவலக பணியாளர்	02	02	-

2. 2020 ஆம் ஆண்டில் நடைமுறைபடுத்துகை செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

2.1 "சஹசக் நிமவும் 2020" சர்வதேச புதுக்கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கக் கண்காட்சி என்பதுடன் புதுக்கண்டுபிடிப்புக்களின் ஊடாக இலங்கையரினை உலகுடன் இணைப்பதற்கான போட்டி

"சஹசக் நிமவும் 2020" சர்வதேச புதுக்கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கக் கண்காட்சி மற்றும் போட்டியானது, புத்தாக்கங்களினை சரியான முறையில் சமூகத்திற்கு அறிமுகப்படுத்துதல், புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு முதலீட்டாளர்களினை புத்தாகுனர்களுடன் இணைத்தல், ஏனைய பங்கு பெறுனர்களுடன் அறிவுப்பகிர்வு, விருதினை வெற்றி கொண்ட புத்தாக்கம் தொடர்பில் சிறந்த மதிப்பீடு மற்றும் சர்வதேச மட்டத்திலான புத்தாக்க கண்காட்சிகளில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு போன்ற அதீதமான அனுகூலங்களினை புத்தாக்குனர்களுக்கு வழங்குகின்றது.




தேசத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த கண்காட்சியில் பங்கு பெரும் வாய்ப்பினை இலங்கை புத்தாக்குனர் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதோடு இவர்கள், பாடசாலை, பல்கலைகழகம் அத்துடன் மூன்றாம் நிலைக்கல்வி, வர்த்தகம் மற்றும் திறந்த அழைப்பு போன்ற பிரதான நான்கு வகுதிகளில் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட பதினாங்கு (14) தொழில் நுட்ப துறைகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்பினை கொண்டுள்ளனர்.

- பொது பாதுகாப்பு, நலன்புரி மற்றும் தேசிய பாதுகாப்பு
- இரசாயனம்
- உணவுத் தொழில் நுட்பம்
- மருத்துவம் மற்றும் மருந்தகவியல்
- பாரம்பரிய மருத்துவம்
- பொது கைத்தொழில் துறை மற்றும் கட்டமைப்பு வசதிகள்
- பௌதீகவியல்
- தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்
- விவசாயம்
- பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்
- சக்தி
- சுற்றாடல் பாதுகாப்பு
- போகுவரத்து
- எந்திரவியல்

நடைமுறையில் உள்ள இந்த கொவிட் - 19 காலப்பகுதியின் போதும் இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவானது, புதிய முறைகளினை பயன்படுத்தி தனக்குரித்தான பணிகளினை மிகச்சிறப்பான முறையில் முன்னெடுத்துச் சென்றது. இதனடிப்படையில், முன்னர் நாடளாவிய ரீதியில் பரவியிருந்த ஆக்கற்திறன் மிகு சமுதாயத்தினரினை விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் மூலம் ஒன்றிணைத்து முன்னெடுக்கப்பட்ட சஹசக் நிமவும் கண்காட்சியானது இவ்வருடம் மெய்நிகர் முறையின் கீழ் இடம்பெற்றமையினை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.





PROF. MARCELO VIVACQUA
Founder of Brazilian and International Innovative Inventors and Researchers Association (ABIPIR)

PROF. PHAN QUOC NGUYEN
Vietnam National University, Hanoi, Director of Public Relations, World Invention Intellectual Property Associations (WIIPA)

DR (MRS). INSIL LEE
President of Korea Women Inventors Association

DR.RADWAN CHOUAIB
National Association for Science and Research – NASR Main Founder Board Chairman, EC Member of IFIA

MS.MANLI-HSIEH
President,World Invention Intellectual Property Associations (WIIPA)

MR.YANG LUNG SHIH
Director of International Development,World Invention Intellectual Property Associations (WIIPA)

MR. WINFRIED STURM
Founder/Manager, S tudent-High-Tech-Invention-Education Association (HAG), EC Member of IFIA

MRS.ERRICHA INSAN PRATISI
President, Indonesian Invention and Innovation Promotion Association (INNOPA)

MR.DENI IRAWAN
President, Indonesian Young Scientist Association (IYSA)

MS.PRITA ELRIZA SAPUTRI
Commissioner, Indonesian Young Scientist Association (IYSA)

PROF. CHUNG YI CHEN
Dean, School of Medical and Health Sciences Fooyin University

MR. ZORAN BARISIC
Secretary General Union of Croatian Innovators, Z agreb (Croatia), I FIA EC member

PROF. MICHAL SZOTA
President, Association of Polish Inventors and Rationalizers,IFIA EC member

DR. SUBBARAO AYNAMPUDI
President, Indian Innovators Association, IFIA EC member

MR. SAHIN KORAY
Founder and president of ABDER (Anatolia Inventions and Inventors Association), IFIA EC member

MR. HOSSEIN VAEZI ASHTIANI
Director of the First Institute Inventors and Researchers in Iran, IFIA EC member

MR. MAJID ELBOUAZZAOUI
President, Union of Inventors, Marrakesh, Morocco

"சஹசக் நிமவும் 2020" கண்காட்சிக்கு தேசிய புத்தாக்கங்கள் தொடர்பில் 538 விண்ணப்பங்களும் சர்வதேச புத்தாக்கங்கள் தொடர்பில் 43 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றன. இப்போட்டியானது, நிபுணத்துவ குழாமினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்பு, சர்வதேச வகுதியில் வெற்றி பெற்றவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில், தங்கப் பதக்கங்களிபேர் எனவும் னை வென்றவர்கள் 26 வெள்ளி பதக்கங்களினை வென்றவர்கள் 17 பேர் எனவும் அறிவிக்கப்பட்டனர். தேசிய மற்றும் சர்வதேச வகுதியின் கீழ் வென்றவர்களது, பதக்கங்கள் மற்றும் சான்றிதல்களினை அவர்களது வீடுகளுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், ஆணைக்குழுவினால் கட்டி எழுப்பப்பப்பட்ட சர்வதேச கூட்டுறவின் காரணமாக, புத்தாக்கத்துடன் தொடர்புடைய சர்வதேச நிறுவனங்களினை சார்ந்த கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட நிபுணர்களினை உள்ளடக்கிய மதிப்பீடு குழாமினை முதல் தடவையாக ஆணைக்குழு நியமனம் செய்தது.

புத்தாக்குனர்களுக்கு அவர்களது புத்தாக்கங்களினை காட்சிப்படுத்துவதற்குரிய ஒரு தனித்துவமான பணித்தள மேடையாக "சஹசக் நிமவும்" அமைகின்றது என்பதுடன் இப்புது கண்டுபிடிப்புக்களாவன, நாளாந்த வாழ்க்கையினை இலகு படுத்தும் வகையிலும் அதுபோன்று எதிர்காலத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையிலுமான தொழில் நுட்ப கருவிகளினை விருத்தி செய்வதன் ஊடாக இலங்கையினை அதி சிறந்த நிலைக்கு உயர்த்துகின்றது.

புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதன் ஊடாக வருமானத்தினை மேம்படுத்தலும் தேசிய பொருளாதாரத்தின் தரத்தினை உயர்த்தலும்

2019 ஆண்டு வரையில் திறைசேரி மானியங்களினை ஓரளவிற்கு சார்ந்ததாக இருந்த இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, அக்காலகட்டத்திலேயே வருமானத்தினை பிறப்பிக்கும் பாதைக்குள் நுழைந்தது. இதனைத்தொடர்ந்து, "சஹசக் நிமவும்" கண்காட்சிக்கு சர்வதேச புத்தாக்கங்களினை பதிவு செய்வத ஊடாக ஆணைக்குழுவானது, 2019 ஆம் ஆண்டிலிருந்து வருமானத்தினை பெற்றுக்கொள்ளத் தொடங்கியது. இதற்கமைவுற, இந்த புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதன் ஊடாக தேசிய பொருளாதாரம் வலுப்படுத்தப்படுவதோடு பொது திறைசேரிக்கும் பங்களிப்பு செய்யக்கூடிய இயலுமையினை ஆணைக்குழு கொண்டது.

வருடம்	உழைக்கப்பட்ட வருமானம்	
2019	சர்வதேச ரீதியாக	USD 900.00
2020	சர்வதேச ரீதியாக	USD 4,991.97
	தேசிய ரீதியாக	Rs. 435,000.00

2.2 புதுக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றினை வினைத்திறன் மிக்க முறையில் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு புதிய செயன்முறைகள்

அக ரீதியில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தாகங்களினை சந்தை நிலைப்பாடுகளில் விரைவாக அணுகக் செய்வதற்கு பின்பற்றப்படும் முறையினை மேலும் வினைத்திறன் கொண்டதாக ஆக்குவதற்கு, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, வர்த்தகமயப்படுத்துகை செய்யப்பட்ட புத்தாக்கங்களின் தரத்தினை மேலும் மேம்படுத்துவதற்குரிய புதிய செயன்முறைகளினை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதுடன் இதன் நோக்கானது, புத்தாக்குனரின் தரத்தினை அதிக ஸ்தீர தன்மை கொண்டதாக ஆக்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு அவர்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல் ஆகும். புதிய செயன்முறைகள் எனும்போது அதற்குள் நிதி ரீதியாக உதவிகளினை வழங்குதல் உள்ளடங்கும். அதாவது, உரிமை ஊதிய கொடுப்பனவு மற்றும் ஆணைக்குழுவின் புத்தாக்குனர் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல், பிற்காலத்தில் அந்நிதியத்தினை வர்த்தகமயப்படுத்துகை நோக்கங்களுக்கு பயன்படுத்துதல் ஆகியன இதற்குள் அடங்கும் விடயங்களாகும்.

2.3 இலங்கைக்கான புத்தாக்க துரிதப்படுத்துகை நிதிய பொறிமுறை (IAFM-SL) – புதிய கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான கருத்திட்டம்

புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு ஆதரவு வழங்கும் நிமித்தமே, இலங்கைக்கான புத்தாக்க துரிதப்படுத்துகை நிதிய பொறிமுறை (IAFM-SL) வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் புத்தாகங்களினை வருமானம் பிறப்பிக்கக்கூடியதொரு புத்தாக்கமாக மாற்றுவதற்கு ஏற்ற வகையில் ஒரு பொறிமுறையினை நேர் அமைச்சின் வழிகாட்டல்களின் கீழ் அமுல்படுத்துகை செய்வதற்கு உறுதுணையாக இருக்கும் பணியானது அமைச்சின் தீர்மானமொன்றிக்கு அமைவுற, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு ஆதரவு வழங்கும் அதிகாரமானது, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு, அதனது சட்டதினூடாகவே அதற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோளானது, ஒரு புத்தாக்கமானது, அது உருவான தொடங்கிய நாளிலிருந்து வர்த்தகமயப்படுத்துகை செய்யும் கட்டம் வரையில் அதாவது அது முடிவுப்பொருளாக வரும் வரையில் அதன் வளர்ச்சிக்கு அதரவு வழங்கலும் அதனூடாக தேசிய வருவாய்க்கு பங்களிப்பு செய்தலும் ஆகும். நிதியியல் உதவி / கடன்களினை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்ட பின்பு அவ்விடயமாது பல கட்டங்களில் கண்காணிக்கப்படும்.

IAFM SL
Sri Lanka Inventors Commission
Ministry of Science, Technology & Research

தேசிய எந்திரவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், தேசிய வர்த்தக சபை, FCCISL, இலங்கை பட்டய கணக்கறிஞர் அலுவலகம் போன்ற இதர பல நிருவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பெயர் குறிப்பீடுகளிலிருந்து 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. புத்தாக்கம் தொடர்பில் விண்ணப்பிக்கப்பட்ட 10 விண்ணப்பங்களுக்குள், அடிப்படை தேவைப்பாடுகளினை பூரண நிறைவு செய்த 02 விண்ணப்பங்கள் மதிப்பீடு பரிந்துரைப்புக்கு அமைவுற கடனினை பெற்றுக்கொள்வதற்கு தகுதி உடையனவாக கருதப்பட்டன என்பதுடன் இக்கடன்களாவன சம்பந்தப்பட்ட தர அறிக்கைகள் கையளிக்கப்பட்ட பின்பு வழங்கப்படும்.

2.4 புத்தாக்கங்களுக்கான வர்த்தக அடிப்படையினை தாபிப்பதற்கான “நவ நிபயும் திரிய”

புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகைப-ணிப்பாளர் சபையின் அனுமதியுடன் செய்வதற்கு உறுதுணையாக இருக்கும் வகையில் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்துகை செய்யப்பட்ட இன்னுமொரு திட்டமே “நவ நிபயும் திரிய - புதுக்கண்டுபிடிப்புக்களுக்கான மானியத்திட்டம்” ஆகும். சந்தையில் சாத்தியத்தன்மையினை உடைய புத்தாக்க-ங்களாவன நிபுணத்துவ குழாமினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்பு அவை கள பரீட்சார்த்த சோதனைக்கு உட்படுத்தப்படும். அதன் பின்பு அக்குறிப்பிட்ட புத்தாக்கமானது, நேர் அமைச்சின் பிரதிநிதித்துவம் உடைய நிதிக்குழுவிற்கு முன்னிலைப்படுத்தப்படும். இக்குழுவில் எடுக்கப்படும் தீர்மானமானது, நடைமுறைபடுத்துகை செய்யப்படும்.

නව නිපැයුම් දිරිය
புத்தாக்கத்துக்கு கைகொடுத்தல்
INVENT Grant Scheme

"நவ நிபயும் திரிய" மானியத் திட்டத்தின் கீழ் உறுதுணையினை பெற்றுக்கொள்வதற்கு இருக்க வேண்டிய அடிப்படை தகைமைகள் வருமாறு.

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. அதி புலமை சொத்து உரிமையினை ஏற்கனவே பெற்றுக்கொண்டவராகவோ அல்லது அதற்கு விண்ணப்பித் தவராகவோ இருத்தல் வேண்டும்.
3. புத்தாக்கம் ஒன்று தொழில்படுவதற்கு ஏற்ற வகையில் ஒரு மூலவகை மாதிரி அமைப்பினை / மாதிரி அமைப்பினை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
4. புத்தாக்கமானது. சந்தையில் சாத்தியத்தன்மை கொண்டதொன்றாக இருத்தல் வேண்டும் அல்லது சமுதாயத்தின் நலத்திற்கு பயன்படுத்தக்கூடியதொன்றாக இருத்தல் வேண்டும்.
5. வர்த்தக ரீதியில் உற்பத்தியானது ஏற்கனவே தொடங்கப்பட்டதொன்றாக இருத்தல் வேண்டும் அல்லது ஒரு வியாபாரம் ஒன்று தொடங்கப்படலிற்கு அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதொன்றாக இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ். நிதியுதவியாக வட்டி இல்லாது புத்தாக்குனருக்கு வழங்கப்பட்ட கடனானது, உடன்பட்ட காலப்பகுதிக்குள் புத்தாக்குனரினால் மீள செலுத்தப்படல் வேண்டும். மதிப்பீட்டு குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைப்புக்களுக்கு அமைவுற, பல தரப்பட்ட விடயங்களுக்கு அதாவது புத்தாக்கத்தினை முடிவுப்பொருளாக விருத்தி செய்வதற்கு தேவைப்படக்கூடிய தொழில் நுட்ப உதவியினை பெற்றுக்கொள்வதற்கு செலுத்தப்பட வேண்டிய நிதியம், அரச நிறுவனங்களினூடாக சோதனை அறிக்கைகளினை பெற்றுக்கொள்ளல், வட்டியில்லா கடன்களினை பெற்றுக்கொள்ளல் மற்றும் அரச நிறுவனங்களினூடாக மூல வகை மாதிரி ஒன்றினை விருத்தி செய்தல் போன்றவை தொடர்பில் புத்தாக்குனர்கள் உறுதுணையினை பெற்றுக்கொள்வர்.

இதனை விட, வர்த்தகமயப்படுத்துகை செயன்முறையின் போது, புத்தாகங்களின் தரமானது உறுதிபடுத்துகை செய்யப்படும் நிமித்தம், அவை வேறுபட்ட தர நிர்ணயிப்பு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்தகைய தர நிர்ணயிப்பு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட புத்தாகங்களின் எண்ணிக்கை 07 ஆகும்.

கொவிட்-19 தொற்று பரவல் காலத்தில் விருத்தி செய்யப்பட்ட புத்தாக்கங்களில் இரு புத்தாக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிக்கு வியாபார தொடக்க நிலை கடன் என்ற வகையில் ரூபாய் 500,000.00 வழங்கப்பட்டது. "நவ நிபயும் திரிய" நிகழ்ச்சிச்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 120 விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் 19 புத்தாகங்களுக்கு கள சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்யும் நிமித்தம் மூன்று புத்தாகுனர்களுக்கு ரூபாய் 2,524,250.00 கடனுதவியாக வழங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு வருட இறுதியில், உரிமை ஊதிய கொடுப்பனவு என்ற வகையில் ரூபாய் 59,343.97 சேகரிக்கப்பட்டது என்பதுடன் இது, வர்த்தகமயப்படுத்துகை செயன்முறை செலவினத்தில் 3% ஆகும்







2.5 புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்பவியல் ரீதியிலான உதவிகளினை வழங்குவதற்கு தொழில்நுட்பவியல் அடைகாப்பக நிலையங்களினை தாபித்தல்

இலங்கை சார் புத்தாகங்களினை அவை வர்த்தகமயப்படுத்துகை செய்யும் அளவிற்கு விருத்தி செய்யப்படுவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளினை வழங்கும் நிமித்தம் தாபிக்கப்பட்டதே இந்த அடைகாப்பக நிலையங்களாகும்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தொழில்நுட்பவியல் அடைகாப்பக நிலையங்களினை தாபிப்பதற்கான கருத்திட்ட பிரேரணையினது பூரண மதிப்பீட்டு விபரங்களாவன 05 பல்கலைக்கழகங்களிடமிருந்து அனுப்பி வைக்கப்பட்டதோடு, இரஜரட்ட மற்றும் ருஹுனு பல்கலைக்கழகங்களில் இந்த அடைக்காப்பக நிலையங்களினை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் ரூபாய் 18.2 மில்லியன் மற்றும் ரூபாய் 19.2 மில்லியன் பெறுமதியான இயந்திரங்களாவன முறையே இரஜரட்ட மற்றும் ருஹுனு பல்கலைக்கழகங்களில் தாபிக்கப்பட்ட தொழில் நுட்ப அடைக்காப்பக நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. வரும் காலங்களில் இந்த நிலையங்களினை தொழிற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இத்தகைய அமைப்பிலான நிலையங்கள் இரண்டு ஏற்கனவே ஜாஎலயிலுள்ள தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திலும் (NRED) மற்றையது யாழ்ப்பாண பல்கலைகழகத்திலும் தாபிக்கப்பட்டுள்ளன என்பதுடன் இதன் மூலம் மாகாண மட்டத்தில் 50 புத்தாக்குனர்கள் பயனடைந்துள்ளனர்.











2.6 புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச கூட்டிணைவுகளினை கட்டியெழுப்பல்

தேசிய அபிவிருத்தி வங்கியுடன் (NDB) இடம் பெற்ற ஒரு கலந்துரையாடலினை தொடர்ந்து, புத்தாக்குனர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே ஒரு கூட்டிணைவினை கட்டியெழுப்பும் நிமித்தம் "Jayagamu Sri Lanka" (இலங்கையினை வெற்றிக்கொள்ளச் செய்வோம்) எனும் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கு சாத்தியத்தன்மை கொண்ட புத்தாகங்களினை அறிமுகப்படுத்துவதன் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தனது ஆதரவினை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு வழங்கியது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புத்தாக்குனர்களினை. முதலீட்டாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்குரித்தான நடவடிக்கைகளினையும், சர்வதேச சந்தையில் நுழைவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்ததுடன் புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்காக இச்செயன்முறைகளில் மகளிரை பரீட்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளினையும் எடுத்தது. இதனைத்தொடர்ந்து தொழில் முயலுமைக்கான இந்திய கல்வியகத்துடன் (IAE) இடம் பெற்ற தொடர் பேச்சு வார்த்தைகளினைத் தொடர்ந்து அமுல்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பயனுறுதி மிக்க நிகழ்ச்சித்திட்டமானது எதிர்காலத்தில் சமூகத்தில் சிறந்த பயனை தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பல்வகைத்தன்மை மிக்க தேசிய ஏற்றுமதியில் புத்தாக்கங்களின் மூலம் பெறப்படக்கூடிய வாய்ப்புக்கள் தொடர்பில் தேசிய ஏற்றுமதி வர்த்தக சபையுடனும் (NCE) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடனும் (EDB) முதல் நிலை கட்ட பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றன.

ஆணைக்குழுவானது. தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய புத்தாக்கங்களினை ஊக்குவிக்கும் முகமாக, தகவல் தொழில் நுட்பத்தில். இலங்கை பிரிவிற்கான பட்டய நிறுவகமான BCS (பிரித்தானிய கணனிச் சங்கம்) உடன் ஒரு புத்தாக்க நிகழ்ச்சித்திட்டத்தினை அரச - தனியார் பங்குடைமை என்ற அடிப்படையில் ஒழுங்கமைப்பு செய்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது, கொவிட்-19 தொற்று, வெள்ளம், பஞ்சம் மற்றும் வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களினை முற்கூட்டியே இனம் காண்பதற்கு, தடுப்பதற்கு கட்டுப்படுத்துவதற்கு அல்லது அதற்கான ஒரு தீர்வினை வழங்குவதற்கு அதி நவீன உற்பத்தி அல்லது புத்தாக்கம் ஒன்றினை தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப துறையில் கண்டுபிடித்தலாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புத்தாகங்களாவன தகைமை மிகுந்த குழாமினால் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட 3 பிரதான வகுதிகளின் கீழ் மதிப்பீடு செய்யப்படும்.

1 வது வகுதி - கல்வி சார் மாணவர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட புத்தாகங்கள் / கல்வி சாரா நிறுவனங்கள்

2 வது வகுதி - தனிப்பட்டவரினால் அல்லது தனிப்பட்டவர்களினால் உருவாக்கப்பட்ட குழாமினால் கண்டுபிடிக்கப்படும் புத்தாக்கங்கள்

3 வது வகுதி - வர்த்தக ரீதியிலான அல்லது வருமானத்தினை நோக்காக நிறுவனங்களினது புத்தாக்கங்கள்

வெற்றி பெற்றவர்களுக்கு, தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பத்தில் இடம்பெறும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்பு கிடைக்கப்பெறுகிறது.



2.7 இளம் புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல் -- இலங்கையருக்கான புத்தாக்க கலாச்சார பாதை வகுக்கப்படல்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றினை சார்ந்த மாணவர்களிடத்தே புத்தாக்க கலாச்சாரத்தினை வளர்க்கும் முகமாக புத்தாக்குனர் கழகங்களினை தாபிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமானது அமுல்படுத்துகை செய்யப்பட்டது. 2020 ஆம் ஆண்டில், 55 புத்தாக்குனர் கழகங்கள் தாபிக்கப்பட்டன என்பதுடன், நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்ட கழகங்களின் எண்ணிக்கை 200 இனை விட அதிகமாகும் என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இந்த கழகங்கள் அதீத நன்மைகளினை அடையும்.

அதீத நன்மைகள் எனும் போது அதற்குள், புத்தாக்குனர் கழகங்களுக்கு தேவைப்படக்கூடிய கருவிகளினை கொள்வனவு செய்வதற்கு அவர்களுக்கு ரூபாய் 30,000.00 வரையில் நிதி உதவி வழங்கப்படல், புத்தாக்கம் மற்றும் புதுக்கண்டுபிடிப்பு போன்ற விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் அதிபுலமை சொத்து உரிமைகளினை பற்றி முழுவதுமாக அறிந்துக்கொள்வதற்கான வாய்ப்பு போன்றன உள்ளடங்கும்.

இந்த கழகங்களினை சார்ந்த மாணவப்புத்தாக்குனர்களுக்கு இவ்விடயங்கள் தொடர்பிலான போதனைகளினை பல்கலைகழக மாணவர்களின் பங்களிப்புடன் புகட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புத்தாக்குனர் கழக செயற்பாடுகளினை விஸ்தரிப்பதற்கு பலதரப்பட்ட தரப்பினர்களிடமிருந்து ஆதரவினை பெற்றுக்கொள்ளல்

வளர்ந்து வரும் புத்தாக்குனர்கள் இடையே புத்தாக்கத்திறனை மேம்படுத்துவதற்காக. புத்தாகுனர் கழக செயற்பாடுகளினை விஸ்தரிப்பதற்கான திட்டங்கள் எதிர்காலத்தில் தீட்டப்படவுள்ளன.

இதற்கமைவுற, இந்த முயற்சியில் சாத்தியத்தினை பெற்றுக்கொள்வதற்கு பலதரப்பட்ட தரப்பினர்களிடமிருந்து பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளினை ஆணைக்குழு எடுத்துள்ளது. இது தொடர்பில் புத்தாக்குனர் ஆணைக்குழுவானது கல்வி அமைச்சுடன் 2020.08.04 ஆம் திகதியன்று ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது என்பதுடன் இதற்கு அமைவுற, பாடசாலைகளுக்கிடையே புத்தாக்குனர் கழகங்கள் வேகமாக பிரபல்யமடைவதோடு கழகங்களினை மிகு சிறப்பாக செயற்பட தூண்டும் என்பதுடன் கழகங்களின் வளர்ச்சியினையும் தொடர்ச்சியான முறையில் அறியச் செய்யும்.

பாடசாலை மட்டத்திலான புத்தாக்குனர் கழகங்கள் 200 இற்கு ரூபாய் இரண்டு மில்லியன் பெறுமதியான நிதி உதவிகளினை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மக்கள் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு டன்படிக்கையின் ஊடாக ஒவ்வொரு கழகத்திற்கும் ரூபாய் 10,000/= வழங்கப்படுவதற்கு இருப்பதுடன் ஏனைய வேறுபட்ட நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவிகளினை பெற்றுகொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தேசிய மட்டத்திலான புத்தாக்க போட்டிகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு அவர்களது பல்கலைகழக நுழைவின் போது மதிப்பெண்கள் வழங்குவதற்கும், புத்தாக்குனர் கழகங்களினை பல்கலைகழகங்களுக்குள் பிரபல்யப்படுத்துகை செய்வதற்கும் அத்துடன் பல்கலைகழக மானிய ஆணைக்குழுவின் கூட்டிணைவுடன் இந்த கழகங்களின் வளர்ச்சி தொடர்பில் முறையான மீளாய்வுகளினை பெற்றுக்கொள்ளவும் அவற்றினை சிறப்பான முறையில் செயற்படச் செய்வதற்கு ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.




புத்தாக்குனர் கழகங்கள் தாபிக்கப்படுதலினை ஊக்குவிக்கும் முகமாக, இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அலைவரிசையில் இலவசமாக பிரச்சாரத்தினை வழங்கியது.

மேலும், புத்தாக்குனர் கழகங்களில் நிதியம் பயன்படுத்தும் முறை மற்றும் புத்தாக்குனர் கழகங்களின் வளர்ச்சி போன்ற விடயங்கள் தொடர்பில், நேர் அமைச்சுக்களுடன் தொடர்புடைய மாகாண மட்டத்து அதிகாரிகள், கல்வி அமைச்சு மற்றும் பல்கலைகழக மானிய ஆணைக்குழு போன்ற இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆதரவினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச் செயன்முறைக்கு, புத்தாக்குனர் கழகங்களின் ஊடாக விருத்தி செய்யப்பட்டு சர்வதேச புத்தாக்க மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான "சஹசக் நிமவும்" போட்டியில் அடையாளப்படுத்தப்பட்ட புத்தாக்கங்களும் மற்றும் காப்புரிமை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட புத்தாக்கங்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

புத்தாக்குனர் கழகங்களினை ஊக்குவிப்பதற்கு "Nipayumani"

பாடசாலை மட்டத்திலான புத்தாக கருத்துக்களினை சந்தையில் சாத்தியத்தன்மை கொண்ட புத்தாகமாக விருத்தி செய்வதற்கு தேவைப்படக்கூடிய தொழில்நுட்பம் மற்றும் அறிவினை புத்தாகுனர் கழகங்களுக்கு பகிர்ந்து வழங்கும் பொருட்டு "கருத்துக்களுக்கான அடைக்காப்பகம்" எனும் பெயரில் ஒரு பணித்தளமேடையினை இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவில் தாபிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு தொலைகாட்சியின் மூலம் அறிவினை பகிர்வதற்கு, வசதியினை கொண்டதொரு அரங்கத்தின் மூலம் அறிவு பகிரப்படுவதற்கு "Nipayumani" எனும் பெயரினை கொண்ட நிகழ்ச்சித்திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டதோடு இரு "YouTube" அலைவரிசைகளினையும் தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த "YouTube" ஆனது புதுக்கண்டுபிடிப்புக்கள் பற்றிய காணொளி நாடாக்களினையும் அறிவினை பகிரக்கூடிய வகையிலான செயற்பாடுகளினையும் மற்றும் zoom போன்ற மெய் நிகர் பணித்தளமேடையினையும் கொண்டதாக இருக்கும்

நிபැයුමාණි
NIPAYUMAANI நிபயுமாணி
THE NATIONAL INNOVATION PROMOTION PROGRAMME





2.8 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அதி புலமை சொத்து உரிமைகளினை பாதுகாப்பதற்கு புத்தாகுனர்களுக்கு உறுதுணையாக இருத்தல்

இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவானது, இலங்கை புத்தாக்குனர்களுக்கு அவர்களது அதிபுலமை சொத்து உரிமைகளினை பாதுகாப்பதற்கு, தொழில் நுட்ப உதவிகளினையும் மற்றும் ஏனைய சேவைகளினையும் வழங்குவதன் மூலமும், அத்துடன் அவர்களது புத்தாக்க திறன் முறையற்ற விதத்தில் கையாளப்படுவதனை தடுப்பதன் மூலமும் உயர்ந்த அளவிற்கு தனது உறுதுணைகளினை வழங்குகின்றது. புத்தாக்குனருக்கு இந்த உறுதுணையினை வழங்குவதற்கு ஏற்ற வகையில் ஆணைக்குழுவின் பதவியணியினர், உலக அதி புலமை சொத்து அலுவலகம் மற்றும் தேசிய அதி புலமைசொத்து அலுவலகம் என்பனவற்றுடன் இணைந்து தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்க ஆதரவு நிலையத்தினால் (TISC) முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக முறையாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இதன் பெறுபேறாக, இலங்கை தேசிய அதி புலமை சொத்து அலுவலகத்திற்கு காப்புரிமைகளினை கோரி 326 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. 2020 ஆம் ஆண்டில் காப்புரிமைக்கு விண்ணப்பிப்பது தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட உறுதுணைகளின் புள்ளிவிபரவியல் தரவுகள் வருமாறு

ஆணைக்குழுவின் ஆதரவு வழங்கப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை	- 41
நிதி உதவி வழங்கப்பட்ட காப்புரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை	- 33
ஆணைக்குழுவின் ஊடாக காப்புரிமைக்கு விண்ணப்பிக்கப்பட்ட புது கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை	- 38

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, சர்வதேச புலமை பற்றிய விழிப்புணர்ச்சியினை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் காப்புரிமை விண்ணப்பங்களுக்கான நிதியியல் ஆதரவினை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் வருடாந்தம் காப்புரிமைக்கு விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

சர்வதேச காப்புரிமைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆதரவு வழங்கப்படும் முறை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புத்தாக்குனர்கள், சர்வதேச காப்புரிமைகள் நிமித்தம் செலவிடும் விண்ணப்ப கட்டணம், PCT கட்டணம் மற்றும் சட்ட கட்டணம் என்பனவற்றினை மீள் நிரப்பல் செய்ய உதவி செய்கின்றது. இச் சேவையினை பெற்றுக்கொள்வதற்கு, எழுத்திலான ஒரு கோரிக்கையினை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு, இக்கோரிக்கையோடு, கொடுப்பனவிற்கான சான்று மற்றும் இப்புத்தாகத்தின் மூலம் சமூக, பொருளாதார, சுற்றாடல் ரீதியாக நாடு பெறக்கூடிய நன்மைகளினை உள்ளடக்கிய முதலீட்டுத் திட்டம் என்பனவும் சமர்பிக்கப்படல் வேண்டும்.





2.9 காலத்தோடு ஒன்றிய சமூக பிரச்சனைகளுக்கு புத்தாக்க ரீதியிலான தீர்வுகள்

- **“கொவிட்-19 இற்கு எதிராக போராடுவோம்” - கொவிட்-19 தொற்றினை தடுப்பதற்கு புதிய கண்டுபிடிப்புக்கள்**

நாட்டில் வேகமாக பரவி வரும் கொவிட்-19 நோயினை தடுப்பதற்கு ஒரு தீர்வினை புதுகண்டுபிடிப்புக்களின் ஊடாக காணும் பொருட்டு இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவானது “கொவிட்-19 இற்கு எதிராக போராடுவோம்” எனும் கருத்திட்டத்தினை 2020. மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்தது. இந்த “புதுக்கருத்துக்கள்”, “கருதுகோள்கள்”, “மூலவகை மாதிரிகள்”, “முடிவு உற்பத்திகள்”, மற்றும் “வடிவமைப்புகள்” என்பனவற்றினை செயல்முறைசார்ந்த பிரயோகங்கள் என்ற வகையில் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக ஆணைக்குழுவானது பற்பல பணிகளில் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.


ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் இச் செயற்பாடுகளுக்குள் 364 புத்தாக்கங்கள் இணைக்கப்பட்டன என்பதோடு, அவற்றுக்குள் குறிப்பாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மருத்துவ உபகரணத்தினை குறைந்த செலவினத்தில் உற்பத்தி செய்யக்கூடிய செயன்முறையும் இதற்குள் அடங்கும் (உதாரணமாக Video Laryngoscope, PPE Kit).

இந்த புத்தாகங்களாவன சாதாரணமான சமூக சுற்றாடல் முயற்சிகளின் மூலம் சாதிக்கப்படவில்லை. இதற்குரிய கருவிகள் மற்றும் திரவியங்கள் என்பன கடும் முயற்சிகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்படவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன், ஒரு பாதுகாப்பு மிக்க நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிச்திட்டத்தினை அமுல்படுத்துகை செய்வதில் பல்வேறுபட்ட தடைகள் மற்றும் சூழல் ரீதியிலான வரையறைகள் உள்ளடங்கலாக பல்வேறு சவால்களுக்கு ஆணைக்குழு முகம் கொடுத்தது. தற்போது, ஒரு நாடு என்ற வகையில் இக்கருத்திட்டத்தின் ஊடாக நாம் பாரிய வெற்றியினை சாதித்துள்ளோம்.



"கொவிட்-19 இற்கு எதிராக போராடுவோம்" - கருத்திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட புத்தாக்கங்கள்


1	Face Mask made with Natural Herbal Medicine	43	Automatic Water tap by Using Foot Pressure
2	Radiation Active Air Purifying and Advanced Mask Device	44	Portable Hand Sanitizer
3	Microorganism Killing and Filtering Air Conditioner	45	Hand Wearable Sanitizing Liquid Container
4	Air Sealed Intubation Bag	46	Safety Automatic Toothpick Dispenser
5	Protective Ventilation Suite for Healthcare Personnel	47	Machine to Avoid Spreading Viruses such as Corona by ATM Machines, Key Pads and Touchpads
6	Open Source Ventilator Project	48	Heated Safety Dress to use for Medical Treatments
7	Fabrication of ICU Beds for Emergency Situation	49	Sanitizing Equipment
8	Ayurvedic Face Mask	50	Robot to use at the hospital.
9	Syringe Pump	51	Isolation Booth for OPD Doctors and to Perform Mass COVID Testing
10	Nerve Stimulator	52	Fully Mechanical ICU Bed
11	Automated Robot for Hospitals	53	All-In-One Sterilizer for COVID 19
12	Microorganism diverting and clearing device (MDCD)	54	Automated Room Sterilizer for COVID 19
13	Device with Catheter Tube, External Public Bladder Hanger	55	Remote control Sanitizer Machine
14	Video Laryngoscope	56	Heat Room
15	PPE with Cooling System	57	Portable Steamer
16	Ultrasonic disinfectant diffuser	58	Sensored Tap
17	Mechanical Cardio Pulmonary Resuscitator	59	Video Assisted Ward Communication System to Minimize Exposure of Doctors to COVID - 19
18	Patient Inspection Chamber with Remote monitoring	60	Modified Face Mask
19	Easy Ventilator Machine	61	App Provide Elaborate Information
20	Automatic Door Opening System	62	Possible Management of Corona viral infections
21	Advanced Ventilator	63	QR Curfew Pass
22	Detection of COVID-19- Manufactured in Sri Lanka	64	Reusable ultra-violet germicidal irradiating (UVGI) sterilizing facepiece respirator
23	Disinfection Chamber	65	Modified Steaming Unit
24	Disinfection Robot	66	Secure Remote Patient Monitoring System
25	Face Mask	67	Oxygen Flow-Rate Measuring Equipment
26	Negative Pressure Chamber	68	Disinfection Spray Gun System
27	Safety Chamber for Medical Staff	69	Walkthrough Disinfection Corridor
28	Human Safety Beam	70	An Organic Essence Extraction Methodology & Apparatus to Extract Essences from Organic Material
29	Sterilization Chamber for COVID-19	71	Low Flow Fixed Performance Oxygen Delivery System
30	Protective Tap	72	CORONA Protective Tissue Paper
31	Remote Control Patient Side Up Mattress	73	Low Cost Reusable Powered Air Purifying Respirator
32	Prescription Management System for Covid 19	74	Foldable Intubating Chamber
33	Automatic Hand Washer	75	Automatic Non-Contact Sanitizer Machine
34	Horizontal/Vertical Collapsible Low-Cost Helmet	76	Disposable protective nebulization chamber
35	Foot Operated Door Handle	77	Remotely Controlled Robots Equipped with UV Lights to Disinfect Public Places
36	Wilco Mini Germ Killer	78	Covid 19 Diagnosis Measuring Pluggable and Web Platform for Identifying Red Areas
37	Self-Quarantine People Monitoring System	79	Isolation Pod
38	Ventilator Pressure Control System	80	Wireless Stethoscope
39	COVID Bag	81	Steam System
40	COVID Guard	82	Re-Usable Transparent Viricidal Mask (RUTVM)
41	Automatic Hand Sanitizer	83	Air Purifying Equipment
42	Ambu Assisted Mechanical Ventilator	84	Sterilizing Robot





"கொவிட்-19 இற்கு எதிராக போராடுவோம்" - கருத்திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட புத்தாக்கங்கள்

85	Driver-Less Transporting System	127	Traditional Disinfectant Medicine
86	Automatic Hand Washing Equipment	128	Heat Generated Automatic Sanitizing Box
87	Soap Petals	129	Fully Automatic Smog Disinfection System
88	Easy Shoe Wearing Case for Preventing Virus Spreading	130	Fully Auto Hand Sanitizing Unit
89	Cellbotic	131	External Treatment Method for COVID 19
90	Covid -19 Quarantine Monitoring System	132	Transport Monitoring System via Mobile App
91	Disinfection Cubical	133	Automatic Any Direction Hand Sanitizing Dispenser
92	Low Cost Standard Face Mask	134	Negative Pressure Chamber for Aerosol Generating procedures & Intubation Procedures
93	Automatic Water Tap	135	Disinfectant Pen Holder
94	Automatic Sanitizing Dispenser	136	Triple Active Currency, Hand and Mobile Equipment Sanitizing Machine
95	PCR Machine	137	Ventilator Machine
96	Protective Face Shield	138	Low Cost UV Sterilizer
97	Hands Free Door Opener	139	Automatic Sanitize Machine
98	Robot for Hospitals	140	Domestic Steam Inhaler
99	Low-Cost Reusable Mobile Sample Collection Chamber	141	Transparent Face Cover for Caps
100	Low Cost Multifunction Bed	142	AeroVEC
101	CORONA Preventive Tap	143	Artificial Doctor Software
102	Quarantine Tracking System	144	Automatic Hand Sanitizer Spraying Machine
103	Integrated Thermal Emanation Glass	145	Anti COVID -19 VIRUS STEAMER
104	Sanitizing Band (SANIBAND)	146	Push Pull Door Handle
105	Modified Drone for COVID 19 Safety Actions	147	Modified steamer
106	Social Distancing Belt when Standing in a Queue or Crowded Place	148	Liquid Dispenser
107	Reliable Proportional Servo Valve for Ventilator Machines	149	Corona Safety Sink
108	Smart Portable Tap Handle Controller	150	Preparation of Ayurveda Formula (Shirishavaleha)
109	Sodium Bicarbonate for IV infusion and Ozone for IV for COVID19	151	Ayurvedic Oral & Throat spray
110	Remote Patient Monitoring System	152	Personal Protective Equipment from Scuba Mask
111	COVID 19 Protection Units	153	Ozone Generator for Disinfect CORONA
112	Patients Monitoring System in Remotely (Central Monitoring System)	154	Bio Safety Cabinet
113	Specialized Covid-19 Human Ventilator	155	PCR Workstation
114	Disinfectant Liquid Spraying Device	156	Sensored Sanitizer and Water Tap
115	Sanitizing Chamber Compressor Type	157	Low Cost Paddled Hand Washing Equipment
116	Rasam Peya Prevent Plus	158	UV Air Purifier
117	Paddle Base Hand Sanitizer	159	KDU VentilatorPro KDU Ver. 1.0
118	High Intensity Pulse Light Disinfection	160	Tracelett – Simple technology to promote community driven contact tracing
119	Gloves Removing Machine	161	Pneumatically driven, time-cycled ventilator with user determined volume and flow rate selection capability
120	Easy Equipment for Control COVID Spreading	162	"Ingurukottamalli" Herbal Tea
121	ManKiwwa Mobile App	163	"SAFE HAND" Disinfectant Pen
122	Ayurvedic Oral & Throat spray	164	Automated RNA extraction Cubicle
123	Disinfection Chamber-Killer CORONA	165	Automatic hand cleaning system for prevention of spreading infections
124	Online e-Medical Care System	166	Chest Compression Device for Cardiopulmonary Resuscitation
125	Disinfection Equipment for Applying in Public Transport	167	Automatic Door Sanitizer
126	Medicine Spraying Apparatus		



"கொவிட்-19 இற்கு எதிராக போராடுவோம்" - கருத்திட்டத்தின் வளர்ச்சி சுருக்கமாக

	மதிப்பீடு - 01 2020/04/06	மதிப்பீடு - 02 2020/04/10	மதிப்பீடு - 03 2020/04/16	மதிப்பீடு - 04 2020/04/21	மதிப்பீடு -05 2020/04/27	மதிப்பீடு - 06 2020/05/04	மதிப்பீடு - 07 2020/06/02	மதிப்பீடு - 08 2020/07/27	மொத்தம்
மதிப்பீடு செய்யப்பட்ட புத்தாகங்களின் எண்ணிக்கை	18	7	11	26	16	32	43	19	172
நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட புத்தாகங்களின் எண்ணிக்கை	13	6	4	16	6	11	3	10	69
ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட / வழங்கப்படவுள்ள நிதியம் மற்றும் மானியங்களின் பெறுமதி (ரூபாய்)	4,350,000.00	1,782,865.00	45,275.00	1,604,500.00	835,000.00	1,874,600.00	1,725,000.00	-	12,217,240.00
உருவாக்கப்படுவதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ள தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை	10	5	4	13	2	11	3	4	52
காப்புரிமை விண்ணப்பிக்கப்படுவதற்கு வழங்கப்பட்ட உதவி									35
வழங்கப்பட்ட ஆராய்ச்சி உதவிகள்									22

கொவிட்-19 இனை இலக்காக கொண்ட புத்தாக்கங்களினை பயனுறுதி மிக்க முறையில் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுவதற்கு ஒரு வாய்ப்பினை புத்தாகுனர்களுக்கு வழங்கும் முகமாக இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவானது இரு விசேட நிகழ்ச்சிச் திட்டங்களினை ஒழுங்கமைப்பு செய்தது.

- இதன் அடிப்படையில் முதலாவது நிகழ்ச்சிச்திட்டமானது, 2020 மே மாதம் 06 ஆம் திகதி கங்காராம பௌத்த விகாரையில் முப்பது (30) புத்தாகுனர்களின் பங்களிப்புடன் இடம் பெற்றது.
- இந்த நிகழ்ச்சியின் வெற்றியினைத் தொடர்ந்து, இதன் இரண்டாவது கட்ட நிகழ்வானது, கங்காராம பௌத்த விகாரையில் 2020 மே மாதம் 27 இடம் பெற்றதுடன் இதில் நூற்றியிருபது (120) புத்தாக்கங்கள் வர்த்தகமயப்படுத்துகைக்காக முன்னளிப்பு செய்யப்பட்டன.
- இந்த நிகழ்ச்சிச் திட்டத்தில் இணையும் முதலீட்டாளர்கள்
  - இலங்கை அரச வியாபார கூட்டுத்தாபனம்
  - கொழும்பு வர்த்தக சபை
  - வரையறுக்கப்பட்ட வைட் லைன் தனியார் கைத்தொழில் துறை
  - வரை. எக்சல் டிரேடிங் (தனியார் நிறுவகம்
  - வரை.அனலிடிகல் இன்ஸ்ரூமன்ட் (தனியார்) நிறுவகம்
  - வரை.நஷனல் PVC நிறுவகம்
  - சிங்கர் (ஸ்ரீலங்கா)
  - வரை.நவலோக வைத்தியசாலை
  - A பவர் மற்றும் கம்பனி
  - வரை.என்விசன் ஹோல்டிங்க்ஸ் இன்டெர்நஷனல் நிறுவகம்
  - வரை. RCS2 தொழில்நுட்ப நிறுவனம்
  - வரை. சிசில் கம்பனி
  - வரை. JKS கம்பனி
  - ஆடை கைத்தொழில் துறை
  - கெயார் பொய்ன்ட்
  - இலங்கை இரசாயனவியல் நிறுவகம்
  - வரை. Laufs நிறுவகம்
  - Kent Group of Companies
  - வரை.செலிங்கோ நிறுவகம்
  - தேசிய அபிவிருத்தி வங்கி
- இந்த நிகழ்ச்சியில் இணைந்துக்கொண்ட முதலீட்டளர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு :



தேசிய ரீதியிலான பொறுப்பு என்ற வகையில், கொவிட்-19 இனை கட்டுப்படுத்தும் இந்த பணிக்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது தனது முழு ஆதரவினையும் வழங்குகிறது

- **மனிதன் - யானை இவற்றுக்கிடையேயான மோதல்கலினை தடுப்பதற்கான கருத்திட்டம் -- மின் வேலிகள் (யானைக்கான வேலி)**

தற்போது நாட்டில் அதீதமாக காணப்படும் பிரச்சனைகளில் ஒன்று, விலங்குகளுக்கும் மனித செயற்பாடுகளுக்கும் இடையில் இடம்பெறு ம் மோதல்களே ஆகும். இப்பிரச்சனையினை தடுப்பதற்கு ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தினை இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது. இது மனிதன் மற்றும் விலங்குகளுக்கு பாதுகாப்பினை வழங்கக்கூடியதொரு நிகழ்ச்சித்திட்டமாகும்.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக, மனிதன் - யானை இவற்றுக்கிடையேயான மோதல்கலினை தடுப்பதற்கு “யானைக்கு வேலியிடல்” தொடர்பில் புது வகையான தீர்வுகளினை நடைமுறைபடுத்துகை செய்வதற்குரிய நடவடிக்கைகளினை ஆணைக்குழு, எடுத்துள்ளது. மேலும் இப்பிரச்சனையினைத் தீர்ப்பதற்கு பல புது வழி முறைகளாவன திறந்த அடிப்படையில் கோரப்பட்டதனைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளில் சாத்தியமானவையாக அடையாளப்படுத்தப்பட்ட வழிமுறைகளாவன, ஏற்கனவே வறுமாறு நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன :

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் பகுதி நடவடிக்கை என்ற வகையில், 07 புத்தாக்கங்கள், திரள் தீர்வு என்ற வகையில் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்பட்டு சமூகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன மேலும் மூன்று கருத்திட்டங்களாவன, முன்னோடி கருத்திட்டங்கள் என்ற வகையில் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டன என்பதுடன் இக்கருத்திட்டங்களாவன, வனவிலங்குகள் திணைக்களத்துடன் இணைந்து நேர் அமைச்சின் அனுமதியுடன் தெரிவு செய்யப்பட்ட 03 இடங்களில் 07 கிலோமீட்டர் விஸ்தீரணத்தினை உள்ளடக்கிய வகையில், அமைக்கப்பட்டன. இந்த “யானைக்கான வேலியானது” உடவலவ பிரதேசத்தில் 01 கிலோமீட்டர் விஸ்தீரணத்திலும் மஹோடபாலமா பிரதேசத்தில் 01 கிலோமீட்டர் விஸ்தீரணத்திலும் மற்றும் நீலபம்மா கிராமங்களில் 02 கிலோமீட்டர் விஸ்தீரணத்திலும் அமைக்கப்பட்டன.





➢ மகாவலி வலயத்திற்கு புத்தாக்க தீர்வுகள்

2020 ஆம் ஆண்டில், முதன் முறையாக, அக புத்தாக்குனர்களுக்கு அக அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட புத்தாகங்களினை பயன்படுத்தி மகாவலி வலயத்தில் மின் வேலிகளினை அமைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆணைக்குழுவானது, அக புத்தாகங்களின் துணையுடன் இலங்கையில் நிலவும் பிரச்சனைகளினை சீர் செய்வதற்காக, மகாவலி அதிகாரசபையினது "Nawa Nipayum Mawana Deyak – Yasa Isurin Piruna Hetak" எனப்படும் அதனது பணிக்கொள்கையுடன் ஒருங்கிணைந்த வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துகை செய்தது. இது 2020 ஆம் ஆண்டில் சாதிக்கப்பட்ட மாபெரும் வெற்றி என்றே கூறலாம். அத்துடன், 2021, ஆம் ஆண்டிலிருந்து, இந்த செயற்பாடானது தொடர்ந்தும் அக புத்தாகங்களினை பயன்படுத்தியே முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைவுற, 2020 ஆம் ஆண்டில், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கும் மகாவலி அதிகாரசபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்க, முதல் கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களை பயன்படுத்தி மகாவலி டீ வலயத்தில் மின் வேலிகளினை தாபித்தல் எனும் இணக்கப்பாட்டிற்கு இரு சாராரும் வந்தனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது, வன விலங்குகள் மற்றும் மனிதர்களிடையே ஏற்படும் மோதல்கலினை தவிர்ப்பதற்கு அக அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களினை பயன்படுத்துவதோடு அவற்றினை வர்த்தகமயப்படுத்துகை செய்யும் அதேவேளையில், மகாவலி வலயத்தில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவத்தோடு, வனவிலங்குகள் சீவிப்பதற்கு பாதுகாப்பான ஒரு சுற்றாடலினை உறுதிபடுத்தலாகும். அத்துடன் இந்த மோதல்களின் காரணமாக சொத்துக்களுக்கும் மற்றும் விவசாய பயிர்களுக்கும் ஏற்படுகின்ற சேதத்தின் விளைவாக ஏற்படும் அக பொருளியல் நட்டத்தினை முற்றாக இல்லாது ஒழித்தலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இன்னுமொரு நோக்காகும்.

இந்த புதிய கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதன் மூலம் புத்தாக்குனர்களுக்கு கிடைக்கக்கூடிய இலாபத்தினை அடிப்படையாக கொண்டு உரிமை ஊதிய கொடுப்பனவினை ஆணைகுழு பெற்றுக்கொள்ளும்.



- **புகையிரத பாதையில் ஏற்படக்கூடிய விபத்துக்களினை தவிர்ப்பதன் ஊடாக வனவிலங்குகளுக்கு பாதுகாப்பு வழங்கல்**

இலங்கை புகையிரத திணைக்களத்தின் வனவிலங்கு பாதுகாப்பு பிரிவுடன் இணைந்து அமுல்படுத்துகை செய்யப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கானது, மலை பிரதேச புகையிரத பாதைகளில் வன விலங்குகளுக்கு ஏற்படுகின்ற விபத்துகளினை தவிர்ப்பதன் மூலம் அதனால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலினை இல்லாது ஒழிப்பதும் மற்றும் புகையிரத போக்குவரத்துக்களில் ஏற்படக்கூடிய இடையூறுகளினை முடிந்த வரையில் ஒழித்தலும் ஆகும். இந்த புகையிரத திணைக்களத்தினால் அறியச் செய்யப்பட்ட பல இடங்களினை குறிப்பாக, அதீதமான யானை விபத்துக்கள் சம்பவிக்கும் மஹாவ -- மட்டக்களப்பு புகையிரத பாதையினை இந்த நிகழ்ச்சித்திட்டம் இலக்காக கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, தற்போது நாட்டில் பல இடங்களில் முகம் கொடுக்கப்படும் பொதுவான ஒரு பிரச்சனைக்கு வெற்றிகரமான புது முறை தீர்வினைத்தரும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாக அமைகிறது.

- **“விவசாயம்” மற்றும் “உணவுத்தொழில்நுட்பம்” என்பனவற்றினை இலக்கு செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டம்**

விவசாயம் மற்றும் உணவுத்தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் புதிய கண்டுபிடிப்புக்களினை பிரபல்யப்படுத்துவதற்கான இந்த நிகழ்ச்சித்திட்டமானது, 2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் திகதி கொழும்பு 02 இல் உள்ள கங்காராம பௌத்த விகாரையில் இடம் பெற்றதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கானது, நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளினை பூர்த்தி செய்வதற்கு உகந்த புதுத் தீர்வுகளினை வழங்குதலாகும்.



புத்தாகுனர்களின் புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு, புத்தாக்குனர்களினை முதலீட்டாளர்களுடன் இணைப்பதற்காகவும் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.

தற்போது நாட்டில் நிலவும் கொவிட்-19 தொற்று பிரச்சனையின் காரணமாக, நாடளாவிய ரீதியில் விருத்தி செய்யப்பட்ட உள்ள புத்தாக்குனர்களால் “விவசாயம்” மற்றும் “உணவுத்தொழில் நுட்பம்” ஆகிய துறைகளில் விருத்தி செய்யப்பட்ட புத்தாக்கங்களாவன மெய்நிகர் அடிப்படையில் இணையத்தின் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து 120 புத்தாகங்களாவன குறும் பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டன.

மேலும், தெரிவு செய்யப்பட்ட புத்தாக்குனர்களுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இணைக்கப்பட்டிருந்த 60 முதலீட்டாளர்களுடன் தமது புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.













with Automated Cylinder and
to get Coconut Fiber
ne tie fiber from coconut husks, by
ses in automated hinges, and send-
two rotating nail wheels and again
r side through rotating nail wheels.

- **இலங்கையில் தேயிலை கைத்தொழில் துறையினை விருத்தி செய்வதற்கு "Tea Talk" நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கையின் பொருளாதாரத்திற்கு சிறந்த வருமானத்தினை நேரடியாகவே பெற்றுத் தரும் ஒரு பாதையாக தேயிலை கைத்தொழில் துறை அமைந்துள்ளது. ஆதலினால், தேயிலை கைத்தொழில் துறையினை மேம்படுத்தலானது இலங்கையின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் என்பதோடு, அக்கைத்தொழில் துறையில் ஏற்படும் வீழ்ச்சியானது பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கும் ஏதுவாகும். இதன் காரணமாக, இக் கைத்தொழில் துறையினை மேம்படுத்துவதற்கு ஏற்ற பயனுறுதி மிக்க புது நிகழ்ச்சிதிட்டங்களினை அமுல்படுத்துகை செய்வதில் ஆணைக்குழு தன் அவதானத்தினை செலுத்தியுள்ளது.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக, தேசிய பொருளாதாரத்தில் உயர்ந்த பங்களிப்பினை நல்கும் தேயிலை கைத்தொழில் துறையில் நிலவும் பிரச்சனைகளினை ஆராய்வு செய்து தீர்வுகளினை வழங்கும் பொருட்டு, ஆணைக்குழுவானது, "Tea Talk" எனும் பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்கம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. சுயாதீன தொலை காட்சி வலையமைப்பின் ஆதரவுடன் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டமாக இலங்கை தேயிலை சபையின் அணுசரனையுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் ஒளிபரப்படவுள்ளது.

இந்த "Tea Talk" நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் கட்டமானது, இத் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ள கைத்தொழில் துறையாளர்களுடன் துணையுடன் அவர்களால் முகம் கொடுக்கப்படும் தொழில் நுட்பவியல் பிரச்சனைகள் இனம் காணப்படுவதோடு, அப்பிரச்சினைகளினை தீர்ப்பதற்கான புது முறைத் தீர்வானது புத்தாக்குனர்களிடமிருந்து பெற முனைதல் ஆகும். இந்த புது முறை கண்டுபிடிப்புக்களாவன அத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களினால் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன், அதனைத் தொடர்ந்து இப்புதுக் கண்டுபிடிப்புக்களினது தரத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளாவன ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். இதன் பின்னர் முறையான விதத்தில தரம் உயர்த்தப்பட்ட இந்த புது கண்டுபிடிப்புக்கள், ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழும் அத்துடன் முதலீட்டாளர்களின் சம்பந்தப்படுகையுடனும் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுவதற்கு முன்னிலைப்படுத்தப்படும்.





- **புதுப்பிக்கத்தக்க சக்தியின் ஊடாக நிலையான மின்சாரத்தினை பிறப்பித்தல்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புதுப்பிக்கத்தக்க சக்தியின் ஊடாக நிலையான மின்சாரத்தினை பிறப்பிப்பதற்கு உகந்த சூழல் நட்புடன் கூடிய தீர்வுகளினையும் மற்றும் சக்தி நெருக்கடிகளினை புதிய கண்டுபிடிப்புக்களின் ஊடாக தீர்ப்பதற்கும் பயன்படுத்தக்கூடிய பொறிமுறைகளினை கண்டறிவதற்கு, உகந்த முயற்சிகளினை எடுக்க தொடங்கியுள்ளது. இந்த முயற்சிக்கு அக புத்தாக்குனர்களுடன், நிலைபேறான சக்தி அதிகார சபை. இலங்கை கடற்படை மற்றும் பல்கலைகழகங்கள் என்பன தமது பங்களிப்பினை வழங்குகின்றன.

நாட்டின் மொத்த மின்சாரத் தேவைபாட்டின் 82% மானது, அதாவது 37.7 GWh ஆனது, தற்போது புதுப்பிக்கப்படாத சக்தி மூலகங்களில் இருந்து வழங்கப்படுகின்றது. புதைபடிவ எரிபொருளின் பயன்படுத்துகையானது உலக வெப்பமயமாதலிற்கு அதிகளவில் பங்களிப்பு செய்யும் அதேவேளையில், அந்த வளங்கலாவன மட்டுப்படுத்தப்பட்டனவாக இருப்பதனால் அதனது விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. எவ்வாறாயினும் மின்சாரம் பிறப்பிக்கப்படுவதற்கு முன் மொழிவு செய்யப்பட்ட இந்த உத்தேச மின் பிறப்பிப்பு முறையானது, நாட்டிற்கு பல அனுகூலங்கலினை தரவல்லது.

முறைமையினை தாபிப்பதற்கும் அதனை நிறுவதற்குமான செலவினம் மிகவும் குறைவானதாகும் என்பதுடன் மின்சக்தியானது ஆகக்குறைந்த விலையில் பிறபிக்கப்படும். இதன் மூலம் பெறக்கூடிய இன்னுமொரு நன்மை யாதெனில், மின் சக்தி நிலையங்களில் அணைக்கட்டுகள் போன்ற பெரிய அளவிலான கட்டிட நிர்மாணிப்புக்கள் தேவைப்படாது. உதாரணமாக, வாயு ஒட்டத்திற்கு மாற்றப்படும் கடல் அலைகளில் உள்ள மின்னிலை ஆற்றல் ஆனது, வினைத்திறன் மிக்க முறையினை பயன்படுத்தி விசையாழிகளினை சுழற்றுவதற்கான மின்சாரத்தினை பிறப்பிக்கும். ஆதலினால், இந்த உத்தேச கருத்திட்டமானது, வினைத்திறன், நம்பகத்தன்மை, நிலைபேறு மற்றும் சூழல் நட்புடன் கூடிய விதத்தில் மின்சாரத்தை பிறப்பாக்கக் கூடிய செயன்முறையினை எடுத்துக்கூறுகின்றது.

நிபுணத்துவம் மிகு மதிப்பீட்டு குழுவினால் தெரிவு செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களுக்கு மூலவகை மாதிரியினை விருத்தி செய்வதற்காக புத்தாக்குனர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஆணைக்குழு எதிர் பார்த்துள்ளது.



2.10 புத்தாகங்களினை காட்சிப்படுத்துகை செய்வதற்கான சர்வதேச மாநாடு - "புத்தாகத்திலிருந்து அதன் தாக்கத்திற்கு" ('From Innovation to Impact - FITI")

புத்தாக்கங்கள் ஊக்குவிக்கப்படுவதற்கு புதிது கண்டுபிடிக்கும் திறனானது சரியான முறையில் சமூகத்திற்கு அறியச் செய்யப்படல் வேண்டும். இந்த இலக்கினை அடைவதற்கு, புத்தாகங்களாவன அதனை கண்டு பிடித்தவர் மட்டத்திலேயே முடக்கப்படாது சர்வதேச மட்டத்தில் அவை வெளிப்படுத்தப்படல் வேண்டும். ஆதலினால், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக "புத்தாக்கத்திலிருந்து அதன் தாக்கத்திற்கு" (FITI) எனும் தலைப்பில் ஒரு சர்வதேச மாநாடானது முதன் முறையாக இலங்கை வரலாற்றில் 2019 நவம்பர் மாதம் இடம்பெற்றதுடன் இதன் நோக்கானது புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாகங்களினை காட்சிப்படுத்துகை செய்யவும் புத்தாகங்களினை ஆராய்ச்சி செய்து ஆராய்ச்சி தேவைப்பாடுகளுக்குரிய வழி காட்டல்களினை பெற்றுக்கொள்ளல் ஆகும். இந்த மாநாடானது இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் (SLAAS) கூட்டிணைவுடன் இடம் பெற்றது. FITI 2020 மாநாடானது 2020 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதியன்று இரண்டாம் தடவையாக பண்டாரநாயக சர்வதேச மாநாடு மண்டபத்தில் இடம் பெற்றது.

உலக அளவில் Scoupus இனால் அங்கீகரிக்கப்பட்ட 'IEEE" போன்ற சஞ்சிகைகளில் தமது ஆக்கங்களினை பிரசுரிப்பதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதோடு இது மிகச் சிறந்ததொரு வாய்ப்பாகும்.

இந்த மாநாட்டின் போது 36 ஆராய்ச்சி ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன என்பதுடன் சம்பந்தப்பட்ட புத்தாக்குனர்களுக்கு "ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புத்தாக்கங்கள் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கமும் சமூக அடிப்படையிலான புத்தாக்கமும்" எனும் தலைப்பின் கீழ் தமது ஆராய்ச்சி ஆக்கங்களினை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு கிடைத்ததோடு இந்த ஆக்கங்களாவன தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நிபுணத்துவம் கொண்டவர்களினால் உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த மாநாட்டில் பிரதான உரையானது, ஆகிய விடயங்களில் நிபுணத்துவம் உடைய பேராசிரியர் ஆடுராஸ் கக்ளுஸ்கஸ் என்பவரால் ஆற்றப்பட்டது என்பதுடன் லுதுவானியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வில்னயுஸ் கெடிமினாஸ் என்பர் இந்த மாநாட்டில் கலந்துக்கொண்டார்.





2.11 அக புத்தாகுனர்களினை ஊக்குவிப்பதற்கு சர்வதேச புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சியில் கலந்துக்கொள்ளல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இலங்கை புத்தாக்குனர்களின் திறனை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கு அதி சிறந்த வழிகாட்டல்களினை வழங்குகிறது. ஆணைக்குழுவினால், ஒழுங்கமைப்பு செய்யப்படும் புத்தாக்க போட்டிகளில் வெற்றி பெரும் புத்தாகுனர்கள் தமது கண்டுபிடிப்புக்களினை சர்வதேச புத்தாக்க போட்டிகளில் முன்னிலைப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த போட்டிகளில் பங்கு பெறும் அக புத்தாக்குனர்கள், தங்களுடைய புத்தாக்கங்களினை சர்வதேச சந்தையில் காட்சிபடுத்துவதற்கான வாய்ப்பினை பெறுகின்றனர். இன்னும் கூறப்போனால், அக புத்தாக்குனர்களின் புத்தாக்கங்கள் சர்வதேச சந்தையில் காட்சிப்படுத்தப்படுவதினால் இவர்களது புத்தாகங்களுக்கு அக சந்தையில் உள்ள கேள்வி அதிகமாகும்.

மேலும், அக புத்தாக்குனர்களினை பொறுத்த வரையில் அவர்களுக்கு புதிய கருது கோள்களினை அறிந்துக்கொள்தல், அதி நவீன வேறுபட்ட தொழில் நுட்பங்களினை புதிய கண்டுபிடிப்புக்கு இணைத்தல், வேறுபட்ட நாடுகளினை சார்ந்த புத்தாக்குனர்களுடன் அறிவினை பகிந்துக்கொள்ளல் மற்றும் புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான அடிப்படையினை அமைத்துக்கொள்ளல் போன்றன இப்புத்தாக்குனர்களினால் அனுபவிக்கப்படும் அனுகூலங்கள் என்பதுடன் வேறுப்பட்ட நாடுகளின் வேறுப்பட்ட கலாச்சாரத்தினை அறிந்துக்கொள்வதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு கிடைக்கின்றது சர்வதேச போட்டிகளில் பங்கு கொள்வதன் மூலம் அவர்கள் அடையும் வெற்றியின் ஊடாக பெறப்படும் விருதானது நாட்டிற்கு அங்கீகாரத்தினையும் பெருமையினையும் தேடித்தரும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கொவிட்-19 தொற்றின் காரணமாக புத்தாக்குனர்களுக்கு அவர்களது புத்தாகங்களினை வேறு நாட்டு போட்டிகளில் முன்னளிப்பு செய்வதற்கு இயலாத காரணத்தினால், மெய்நிகர் அடிப்படையில் போட்டிகள் நடாத்தப்பட்டு புத்தாக்குனர்களுக்கு அப்போட்டிகளில் பங்கு கொள்வதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இந்த மெய்நிகர் போட்டிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் பற்றிய விபரங்கள் வருமாறு

கண்காட்சி	கனடாவில் இடம் பெற்ற 5 வது சர்வதேச புதுக்கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க போட்டி
நடாத்தும் நாடு	கனடா
புதிய கண்டுபிடிப்பு	விருது
A new method of increasing the speed of movement of the human sperm	தங்கப்பதக்கம்
Fire prevention plug base	தங்கப்பதக்கம்
Low-cost L.E.D panel lighting system	வெள்ளிப்பதக்கம்
Automatic Garbage Segregation Bin	வெள்ளிப்பதக்கம்
Walking charger	வெள்ளிப்பதக்கம்
Braille, auditory and kinetic reading tool for children with visual impairments (brak)	வெள்ளிப்பதக்கம்
Environment Friendly Horticultural Plugs	தங்கப்பதக்கம்
Multipurpose Hybrid Solar Dryer	வெள்ளிப்பதக்கம்
Horizontal/vertical collapsible low-cost face shield	தங்கப்பதக்கம்
Safety automated toothpick dispenser	வெள்ளிப்பதக்கம்
Non-Invasive Screening Tool to Detect Anemia	தங்கப்பதக்கம்
Mosquito repellent, antiseptic, healthy and natural air-freshener mainly with Ceylon Cinnamon oil or waste water in manufacturing cinnamon oil (prohibited to dump in environment by law), water, emulsifier, alcohol and menthol	தங்கப்பதக்கம்
Distant ent examiner	வெள்ளிப்பதக்கம்
All in one sterilizer	தங்கப்பதக்கம்
Automated room sterilizer	வெள்ளிப்பதக்கம்
Paste to treat for skin diseases	தங்கப்பதக்கம்
“Vision Handy capped Read Currency”	தங்கப்பதக்கம்
“Disabled Abled”	வெள்ளிப்பதக்கம்
Formulation of healthy herbal valued nutritional biscuit incorporating turmeric as main ingredient	வெள்ளிப்பதக்கம்
Anti-COVID-19 virus killer steamer	தங்கப்பதக்கம்
Anti-COVID-19 virus safety glasses	வெள்ளிப்பதக்கம்
Personal water filter	வெள்ளிப்பதக்கம்
A process to produce growing medium based on spent tea leaves and coco peat mixture	வெள்ளிப்பதக்கம்
High scalable Emergency Ventilator with Pressure and BPM feedback	தங்கப்பதக்கம்



ஆணைக்குழுவிற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கப்பெறல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றுடன் தொடர்புடைய பிரதான சர்வதேச அமைப்பாண்மைகளில் உறுப்புரிமையினை பெற்றுக்கொண்டதன் ஊடாக சர்வதேச மட்டத்தில் தொடர்புகளினை விருத்தி செய்துள்ளது. அவையாவன

புத்தாக்குனர் கழகத்தின் சர்வதேச சம்மேளனம் (IFIA)

உலக புதுக்கண்டுபிடிப்பு மற்றும் புலமை சொத்து கழகம் (WIIPA)

இந்த கழகங்களில் உறுபுரிமையினை ஆணைக்குழு பெற்றுக்கொண்டதனால், பல சர்வதேச புத்தாக்க போட்டிகளில், இளம் பருவத்தினருக்கான அழைப்பு, திறந்த அழைப்பு மற்றும் மகளிருக்கான அழைப்பு என வேறுபட்ட வகுதிகளில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பினை ஆணைக்குழு பெற்றுக்கொண்டது. இந்தக் கழகங்களாவன, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை முன்னெடுத்தல், புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்தல், அதிபுலமை சொத்து உரிமைகளினை பாதுகாத்தல், சூழல் நட்புடன் கூடிய புத்தாகங்களினை ஊக்குவித்தல் மற்றும் புத்தாகங்களினை பிரபல்யப்படுத்துதல் போன்ற வேறுபட்ட சேவைகளினை வழங்குகிறது. மேலும் இந்த கழகங்களாவன தமது செயற்பாடுகளினை பலர் அறியும் படி பிரபல்யப்படுத்தல் மற்றும் சிறந்த கருத்திட்டங்கள் / புத்தாக்கத்திற்கு விருதுகள் மற்றும் பணப்பரிசுகளினை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

விமான பயண சீட்டுக்கு அனுசரணை வழங்கல், தங்குமிட வசதிகள். பரிசீலனை சாவடிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்கு சலுகை விலை போன்றனவும் இக்கழகங்களினால் ஆற்றப்படும் மேலதிக சேவைகளாகும். இந்த ஊக்குவிப்பும் அங்கீகாரமும் புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களினை அக மற்றும் சர்வதேச சந்தைகளில் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு பெரிதும் ஆதரவாக அமைகின்றது.

சர்வதேச புத்தாக்குனர் போட்டிகளில் நடுவர் என்ற ரீதியில் பங்கேற்றல்

சர்வதேச புத்தாக்குனர்கள் கூட்டமைப்பு சம்மேளமானது (IFIA) கோவிட்-19 தொற்றுயோயைத் தடுப்பதற்கு புது முறையான தீர்வுகளை புத்தாக்குனர்கள் முன்னளிப்பு செய்வதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கும் முகமாக "கொரோனாவுக்கு எதிராக புத்தாக்குனர்கள்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தியது. இத் நிகழ்ச்சித் திட்டத்தின் போது முன்னளிப்பு செய்யப்பட்ட தீர்வுகள் தொடர்பிலான மதிப்பீடுகளாவன, 2020 மெ மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறையின் கீழ் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்யும் நடுவராக கலந்துக்கொள்வதற்கான வாய்ப்பானது, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி திரு.நளின் தொலவத்த அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. இது, ஒரு நாடு என்ற வகையில் எமது நாட்டிற்கு கிடைக்கப்பெற்ற ஒரு பெரிய சாதனையாகும்.

2.12 புத்தாகங்களினை சமூக மட்டத்தில் அறியச் செய்வதற்கு மாகாண மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டம்

ஆணைக்குழுவானது, இலங்கை புத்தாக்குனர்களது, புத்தாக்கம் மற்றும் புதிது கண்டுபிடிக்கும் திறன் என்பனவற்றினை ஊஊகுவிக்கும் முகமாக நாட்டின் சகல மாகாணங்களினையும் உள்ளடக்கிய வகையில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன, குறிப்பாக பாடசாலை மாணவர்கள், பல்கலைகழக மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்கள், புத்தாகங்களில் சம்பந்தப்பட்ட தனிப்பட்டோர் வர்த்தக மயப்படுத்துகை மட்டத்தில் உள்ள தனிப்பட்டோர் மற்றும் இவ்விடயத்தில் ஆர்வமுடைய தனிப்பட்டோர் ஆகியோரினை இலக்காக கொண்டதாகும். இந்த வருடத்தில் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.



2.13 புத்தாக்குனர்களின் விழிப்புணர்ச்சிக்கு நேரடி நிகழ்ச்சித்திட்டங்கள்


புத்தாக்குனர்கள் தமது புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு ஆணைக்குழுவின் உதவியினை நாடுமிடத்து, அதற்காக அவர்கள் சரியான செயன்முறையினை பின்பற்றப்படும் போது அவர்களுக்கு விரைவாக துலங்கல்கள் கிடைக்கப்பெறும் அதேவேளையில் அவர்களால் பின்பற்றப்படும் செயன்முறையானது தவறானதாக இருப்பின் அவர்கள் உரிய துலங்கல்களினை பெற்றுக்கொள்வதற்கு அதிக காலம் காத்திருக்க வேண்டியதாக உள்ளது. ஆதலினால் இவ்விடயம் தொடர்பில் சரியான முறை புத்தாக்குனர்களால் பின்பற்றப்படுவதற்கு, ஒரு விசேட பயிற்சிப்பட்டறையானது, அவர்களுக்கு 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஆணைக்குழுவின் வளாகத்தில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் புத்தாக்குனர்களுக்கு நேரடியாக பங்குபெறும் வாய்ப்புடன் முகப்புத்தகத்தின் ஊடாகவும் அவர்களுக்கு இந்த நிகழ்ச்சிதிட்டத்தில் தொடர்பு கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

மேலும் காப்புரிமை தொடர்பில் ஒரு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிதிட்டமானது ஆணைக்குழுவின் வளாகத்தில் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம் பெற்றது. இந்த நிகழ்ச்சி திட்டத்திலும் மெய் நிகர் அடிப்படையில் இணையத்தின் ஊடாக தொடர்பு கொள்ளகூடிய வாய்ப்பினை புத்தாக்குனர்கள் பெற்றனர். அக புத்தாக்குனர்களினை இலக்காக கொண்டு, ஆணைக்குழுவினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டங்கள், நாட்டில் தற்போது நிலவும் சுகாதார நிலை தொடர்பிலான பிரச்சனையின் காரணமாக இணையத்தின் மூலமும் தொடர்பு கொள்ளக் கூடியவாறும் வடிவமைக்கப்பட்டமை மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

2.14 புத்தாக்கங்களினை பிரபல்யப்படுத்துகை செய்தல்

“இலங்கை புத்தாக்குனர்கள்” - YouTube இன் ஊடாக அணுகல்


வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுவதற்கு சாத்தியத்தன்மையுடைய புத்தாகங்களினை காட்சிப்படுத்துகை செய்வதற்கும், வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுடன் இணைவதற்கும் அத்துடன் புதிய தொழில் நுட்பங்கள் அறிந்து கொள்வதற்கு தேவையான அடிப்படையினை வழங்குவதற்கும் இந்த புதிய நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்துகை செய்யப்பட்டது இந்த YouTube அலைவரிசையானது புத்தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியினை புத்தாகுனர்களுக்கு ஏற்படுத்துவதோடு காப்புரிமைக்கு விண்ணப்பிக்கும் செயன்முறை தொடர்பில் சிறந்த அறிவினையையும் புத்தாக்குனர்களுக்கு வழங்குகிறது.



முறை சார் வலைத்தளம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் முறைசார் வலைத்தளமானது தற்போது பல புதிய பயனுள்ள தகவல்களினை உள்ளடக்கிய வகையில் தற்போது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வலைத்தளமானது, புத்தாக்குனர்களுக்கு, முதலீட்டாளர்களுக்கு மற்றும் புத்தாக்கத்தில் ஆர்வமுடைய இலங்கை வாழ் சமூகத்தினருக்கு பரந்த சேவையொன்றினை வழங்குவதற்கு ஏற்ற வகையில் இத்தளமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வலைத்தளத்தின் விசேட பண்பானது, கைத்தொழில் துறையுடன் தொடர்புற்ற வகையில் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கு புதிய தீர்வுகளினை தேடுபவர்கள், ஆணைக்குழுவின் கூட்டிணைவின் ஊடாக புத்தாக்குனர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருத்தல்.



மொறட்டுவ பல்கலைக்கழத்தின் மாணவர் கிளைப்பிரிவுடன் மூலோபாய பங்குடைமை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, மொறட்டுவ பல்கலைக்கழகத்தின், மருத்துவத்துறையில் IEEE எந்திரவியல் மற்றும் உயிரியல் மாணவ கிளைப்பிரிவினால் மூலோபாய பங்காளர் என்ற வகையில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட ISC 2021 மாநாட்டுடன் கூட்டிணைந்து உயிர் மருத்துவ எந்திரவியல் துறையில் புதிய கண்டுபிடிப்புக்களினை விருத்தி செய்வதற்கு பங்களிப்பு செய்தது.

இந்த மாநாட்டின் போது, மருத்துவ விம்பங்கள், உயிரியல் சமிக்கைகள் மற்றும் உயிரியல் இயந்திரவியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் புதிய கண்டுபிடிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு புதிய ஆராய்சிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், நாட்டில் தற்போது பரவி வரும் கொவிட்-19 தொற்றினை தடுப்பதற்கான புதுக்கண்டுபிடிப்புக்களும் இந்த மாநாட்டில் முன்னளிப்பு செய்யப்பட்டன.



ஊடக பிரசாரம்

இலங்கையில் புத்தாக்க கலாச்சாரத்தினை வளர்க்க முற்படும் முயற்சிக்குள் அக புத்தாகங்களினை பிரபல்யப்படுத்துகை செய்வதற்கு முனையுமிடத்து அங்கு ஊடக பிரசாரமானது விசேடமானதொரு இடத்தினை வகிக்கின்றது. ஆதலினால், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, டிஜிடல், அச்சிடுதல் மற்றும் சமூக ஊடகங்களுடன் கூட்டிணைந்து ஊடகத்தின் ஆதரவினை சுயேச்சையாகவே பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்பு பற்றிய விழிப்புணர்ச்சியினை மக்களிடையே எதுவித பிரச்சார செலவுகளுமின்றி கொண்டு வருவதற்கு அநேகமான ஊடக நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்தியது. இவை தொடர்பில் சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன: கொண்டு வந்ததோடு

- **புத்தாக்குனர் - முதலீட்டாளர் தொடர்பிணைப்பு (IIL) நிகழ்ச்சித்திட்டங்கள்**

  புத்தாக்குனர் - முதலீட்டாளர் தொடர்பிணைப்பு (IIL) நிகழ்ச்சித்திட்டங்கள் என்பதன் கீழ் "1 මගේ රට" (1வது எனது நாடு) எனும் தலைப்பின் கீழ் ஒரு தொகுதி நிகழ்ச்சித்திட்டங்களாவன சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அலைவரிசையில் அவர்களது முழு அனுசரணையின் கீழ் ஒளிபரப்பு செய்யப்பட்டது.







- **City Fm - “புத்தாக்கம் பற்றிய கண்ணோட்டம்” (“නවෝත්පාදන දැක්ම” / “Innovation Outlook”) நிகழ்ச்சித்திட்டம்**

  இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆதரவின் கீழ் “புத்தாக்கம் பற்றிய கண்ணோட்டம்” எனும் நிகழ்ச்சித்திட்டமானது (“නවෝත්පාදන දැක්ම”) இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் City Fm அலைவரிசையில் சகல கிழமை நாட்களிலும் காலை 7 மணிக்கு ஒளிபரப்பாகின்றது. இந்த வரிசையில் 18 நிகழ்ச்சிச் திட்டங்களாவன 28 புத்தாக்குனர்களின் பங்களிப்புடன் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

- **“சவால்” (“THE CHALLENGE”) - inventions that trend to be a rebel and not the fashion**

  பல புத்தாக்கங்களாவன “தெரன” தொலைக்காட்சி அலைவரிசையில் அவர்களது முழு அனுசரணையின் கீழ் ஒளிபரப்பு செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது





- **சிரச மக்கட் சக்திக்கான (“Sirasa” Gammedda) புத்தாக்கம்**

  இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, சிரச மக்கட் சக்தியுடன் (“Sirasa” Gammedda) இணைந்து புத்தாக்கம் பற்றியதொரு நிகழ்ச்சிச்திட்டத்தினை நொச்சியாகமையில் உள்ள தக்சிலா கல்லூரியில் நடாத்தியது.





➢ தெரன "ஆரம்பிப்பு 2021" ('START UP 2021")

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது அரச - தனியார் பங்குடைமை அடிப்படையில் புத்தாக்குனர்களினை உருவாக்குவதற்கு தெரன தொலைக்காட்சி அலைவரிசைகளினால் உருவாக்கப்பட்ட "ஆரம்பிப்பு 2021" ("START UP 2021") நிகழ்ச்சிச் திட்டத்தின் மூலோபாய பங்காளராக செயற்படுகிறது. 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் மதிப்பீட்டு செயன்முறைகள் தொடங்கின.

வளர்ந்து வரும் புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாகங்களினை விருத்தி செய்வதற்கு ஆலோசனை சேவைகளினை வழங்குதல் வேண்டும் என்பதே இந்த "ஆரம்பிப்பு 2021" ("START UP 2021") நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்காகும் என்பதுடன் இது ஒரு நிதர்சன நிகழ்ச்சி ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது புத்தாக்குனர்களுக்கு, வியாபாரம் சம்பந்தமான ஆலோசனைகள், வர்த்தகமயப்படுத்துகை மட்டத்திற்கு தமது புத்தாகங்களினை மேம்படுத்துவதற்குரிய அறிவு, வியாபாரம் தொடர்பிலான மேலதிகமான அறிவு, மற்றும் அனுபவமும் திறனும் என்பனவற்றினை பெற்றுக்கொள்ள உதவுகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியாளர்களுக்கு அவர்கள் சொந்தமாகவே ஒரு வியாபாரத்தினை தொடங்குவதற்கு மானிய உதவி கிடைக்கப்பெறுகின்றது.





- **ஆணைக்குழுவின் முயற்சிக்கு அச்சு ஊடகங்களின் ஆதரவு**

  அச்சு ஊடகங்களாவன புத்தாக்கத்தின் முக்கியத்துவத்தினை வலுவாக எடுத்துரைப்பதன் மூலம் அப்புத்தாக்கம் சமூக மட்டத்தில் பிரபல்யம் அடைவதற்கு தனது முழு ஆதரவினையும் வழங்குகிறது.

2.15 தேசிய புத்தாக்குனர் தினம்

நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்தாக்குனர்களால் ஆற்றப்படும் பங்களிப்பினை பாராட்டும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதியானது புத்தாக்குனர் தினமாக அமைச்சரவையின் அனுமதியுடன் அறியச் செய்யப்பட்டது. இந்த நாளானது, அதி சிறந்த நிபுணத்துவம் கொண்ட எந்திரியும், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் முதலாவது ஆணையாளருமான கலாநிதி எ.என்.எஸ். குலசிங்க அவர்களது பிறந்த நாளாகும். இது அவர்களால் வழங்கப்பட்ட அரும் சேவையினை நினைவுக்கூறும் முகமாக இத்தினம் புத்தாக்குனர் தினமாக அறியச் செய்யப்பட்டது.

இதற்கமைவுற, இந்த விசேடம் மிக்க நாளன்று இலங்கை புத்தாக்குனர்களின் கண்டுபிடிப்பால் ஆக்கப்பட்ட யானைக்கான வேலியினை (மின் வேலி) கருவலகஸ்வேவா பிரதேச மக்களுக்கு இலங்கை புத்தாக ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்டது.

2.16 மனித வள விருத்தி

அக புத்தாக்குனர்களுக்கு உயர்ந்த அளவிற்கு உறுதுணையாக இருக்கும் மாபெரும் பொறுப்பானது, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதலினால், புத்தாக்குனர்களுக்கு மிகத் தரமான மற்றும் வினைத்திறன் மிகு சேவையினை வழங்கும் நிமித்தம் ஆணைக்குழுவின் பதவியணியினரின் தகைமையானது மேம்படுத்தப்படல் என்ற நோக்குடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் வருமாறு :

- ஆணைக்குழுவினை சார்ந்த முழு பதவியினரும் உளவியல் மற்றும் மூலோபாய கல்வி நிலையத்தினால், நேர்மறை சிந்தனைகள் மற்றும் ஊழியர் ஊக்குவிப்பு எனும் பொருள் தொடர்பில் இலவசமாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துக்கொண்டனர்.



- முது நிலை வியாபார கற்கையில் (MBS) 02 வருடங்களினை கொண்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு அலுவலர் பங்கேற்றார் என்பதுடன் அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளமா எனும் கற்கை நெறியில் இன்னுமொரு அலுவலர் பங்கேற்றார். (HN-DIPPCA) - 2020/2021 (01 வருடம்).

- சகல பதவியணியினருக்கும் இடையே கூட்டுறவினை ஏற்படுத்தவும் அவர்களினை ஊக்குவிக்கவும் எல்லை கடந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது சிங்கராஜ மழைக்காடுகளுக்கு அண்மையில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.



3. நிதி அறிக்கை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
நிதி நிலைமை கூற்று

டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	குறிப்பு	2020 இலங்கை ரூபாய்	2019 மீள் குறிப்பீடு இலங்கை ரூபாய்
சொத்துக்கள்			
நடப்புச்சொத்துக்கள்			
வங்கியும் காசு மீதியும்	1	**66,587,892**	101,732,442
முற்பணசொத்துக்கள்		**-**	3,300
கடன்பட்டோர்		**10,491,776**	1,010
ஏனையபெறுகைகள்		**10,000**	56,401
மீளளிக்கத்தக்க வைப்புக்கள்	2	**2,407,000**	2,405,000
அனர்த்த கடன்		**756,212**	676,723
கோவிட் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன்		**994,714**	-
தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,பெறப்பட		**7,560**	7,560
ஏனைய முற் பணங்கள்		**136,633**	136,633
முற்பனகொடுப்பனவுகள்	3	**592,860**	2,270,558
இலங்கை புத்தாக்குனர் நிதிய கடன்		**1,050,885**	10,289,283
கழிக்க ஐயக்கடன் ஒதுக்கீடு	4	**(9,802,964)**	(9,802,964)
எரிபொருள் இருப்பு		**100,000**	100,000
t சர்ட் இருப்பு	5	**414,480**	415,265
காகிதாயிகள் இருப்பு	5	**445,954**	485,246
		74,193,002	**108,776,457**
நடப்பல்லா சொத்துகக்கள்			
இலங்கை புத்தாக்குனர் நிதியம்		**2,198,830**	236,600
கொவிட் நிகழ்ச்சித்திட்டம் கடன்கள்		**994,376**	
அனர்த்த கடன்		**2,672,247**	2,493,253
சொத்து மற்றும் கருவிகள்	6	**35,478,691**	9,953,626
		41,344,145	**12,683,479**
மொத்த சொத்துக்கள்		**115,537,147**	**121,459,936**
நிதியம் மற்றும் பொறுப்புக்கள்			
நடப்பு பரிப்புக்கள்			
கடன் கொடுதோர்	7	**167,330**	3,862,139
நிலுவை செலவினம்	8	**2,365,509**	12,185,469
		2,532,840	16,047,608
நடப்பல்லாத பரிப்புக்கள்			
பணிக்கொடை ஏற்பாடு	9	**3,682,614**	2,820,257
IAFM-SL	10	**36,472,155**	46,472,155
தேசிய அடைகாப்பக நிதியம்	11	**45,417,472**	51,202,448
அரச மூலதன மானியம்	12	**14,334,314**	(3,842,091)
இலங்கை புத்தாக்குனர் நிதியம்	13	**13,240,886**	8,998,495
மொத்த பரிப்புக்கள்		**115,680,281**	**121,698,871**
தேறிய சொத்துக்கள்		**(143,134)**	**(238,935)**
தேறிய சொத்துக்கள்/ஒப்புரவு			
திரட்டப்பட்ட நிதியம்		**(143,134)**	(238,936)
மொத்த தேறிய சொத்துக்கள் /ஒப்புரவு		**(143,134)**	**(238,936)**

நிதிக்கூற்றுக்களுக்கான முக்கிய கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன பக்கங்கள் 47 இலிருந்து 58 வரையிலும் காட்டப்பட்டுள்ளன என்பதுடன் இது நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

D.A.சரச்சந்திர
உதவி பணிப்பாளர்(நிதி)

N.N.W.டொலவத்த
பணிப்பாளர்/ சி.நி.அ

இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கும் முன்னளிப்புக்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்

இந்த நிதிக் கூற்றுக்களாவன பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டு அவர்கள் சார்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது

பேராசிரியர் ஆர்.யு. ஹல்வதுர
ஆணையாளர்

பேராசிரியர் நீலிகா மாளவிகே
உதவி ஆணையாளர்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
நிதியியல் செயலாற்றுகை கூற்று

டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்குரியது	குறிப்பு	2020	2019 மீள் குறிப்பீடு
		LKR	LKR
வருமானம்			
அரச மானியம்			
-நடப்பு	14	40,600,000	42,699,775
-கருத்திட்டங்கள் /நிகழ்ச்சித்திட்டம்	18	4,355,907	69,430,417
-செயற்றிறன் நிர்மாணம்		270,000	352,315
மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள்	6	1,735,688	1,815,558
அடை காப்பக நிதிய கடன் தீரவு - இயந்திரமும் கருவிகளும்		5,784,976	37,639
ஏனைய வருமானம்	15	1,559,070	359,143
மொத்த வருமானம்		**54,305,639**	**114,694,846**
செலவினம்			
தனி ஆள் வேதனாதிகள்	16	17,430,480	17,557,905
நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினம்	17	25,154,266	29,060,493
பெறுமான தேய்வு நிலையான சொத்துக்கள்	6	7,520,664	1,853,197
பணிக்கொடை	9	862,357	708,053
புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினம்	18	4,355,907	69,430,417
ஏனைய செலவினம்	19	7,863	15,604
மொத்த செலவினம்		**55,331,537**	**118,625,668**
மிகை/நட்டம்		**(1,025,898)**	**(3,930,822)**

நிதிக்கூற்றுக்களுக்கான முக்கிய கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன பக்கங்கள் 47 இலிருந்து 58 வரையிலும் காட்டப்பட்டுள்ளன இத நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு ஒப்புரவில் மாற்றம் பற்றிய கூற்று

	குறிப்பு	திரட்டப்பட்ட நிதியம்	மொத்த ஒப்புரவு
		LKR	LKR
2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் உள்ளவாறான மிகுதி		4,302,294	4,302,294
2019 ஆம் ஆண்டிற்கான மிகை/ நட்டம்		(4,589,666)	(4,589,666)
முன்னைய வருட கொடுப்பனவினை இரத்து செய்தல்		28,800	28,800
தேசிய எந்திர .. நிலையத்திடமிருந்து முன்னைய வருட செலவி.		182,181	182,181
2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மிகுதி		(76,391)	(76,391)
முன்னைய வருட சீராக்கம் 2019			
பெறுமானத்தேய்வு சீராக்கம்		11,352	11,352
அடைகாப்பக நிதிய கடன் தீர்வு இயந்திரம் மற்றும் கருவிகள்		(11,352)	(11,352)
ஏனைய ஒப்பந்த சேவைகளில் திருத்தம்		(166,833)	(166,833)
மூலதன செலவினத்தில் முற்பண கொடுப்பனவு		118,828	118,828
2019 ஆம் ஆண்டுக்குரிய நிலுவை செலவின பதிவு		(114,541)	(114,541)
2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மிகுதி மீள் குறிப்பீடு		**(238,936)**	**(238,936)**
